பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 05 திங்கட்கிழமை 18.05.2020 கதிர் 194

## கொரோனா 981

கொழும்பு, மே 18
கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 11 பேர் நேற்று ஞாயிற்றுக்கிழமை பின்னிரவு அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின்

பக்கம் 04

## அமைதியாக வீடுகளில் சுடரேற்றி உறவுகளை இன்று அஞ்சலிப்போம்

கூட்டமைப்பின் தலைவர் அழைப்பு



யாழ்ப்பாணம், மே 18
தமிழினத்தின் உரிமைக்கான விடுதலைக்கான போராட்டத்தில் முள்ளிவாய்க்கால் பேரவலம் ஓர் ஆறாத வடு. அதில் தமது உயிர்களை ஆகுதியாக்கிய எமது

பக்கம் 02

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை இன்று எவரும் அனுஷ்டிக்கக்கூடாது

இப்படிக் கூறுகின்றது பாதுகாப்பு அமைச்சு
கண்காணிப்பதற்கு அரச படைகள் குவிப்பு

கொழும்பு, மே 18
தமிழீழ விடுதலைப்புலிகளை நினைவு கூர்ந்து வடக்கு, கிழக்கில் எவரும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை இன்று அனுஷ்டிக்க முடியாது எனப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.
பாதுகாப்பு

பக்கம் 04

## இது ரகசியம் அல்ல!

இலங்கையின் சட்ட வரலாற்றில் மிக முக்கியமான வழக்கு ஒன்று, ஒரு முக்கியமான இடத்திலே நடக்கவிருக்கின்றது.
முக்கியமான வழக்கு என்றதும் - அதுவும் இந்த சந்தர்ப்பத்தில் முக்கிய

பக்கம் 02

## முள்ளிவாய்க்கால் பேரவல நினைவு இன்று;

# நினைவேந்தலை நிறுத்த பொலிஸார் கிடுக்கிப்பிடி!

### கஜேந்திரகுமார், கஜேந்திரன் உட்பட 11 பேரை தனிமைப்படுத்துவதற்கு நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம், மே 18
யாழ்ப்பாணத்தில் நடந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளில் பங்கேற்றமைக்காகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் 11 பேரை வீடுகளில் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துமாறு பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரிக்கு யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் கட்டளையிட்டுள்ளார். இந்த உத்தரவு நேற்று பிறப்பிக்கப்பட்டது.

பக்கம் 02

## அங்கீகரிக்கப்பட்ட தினமல்ல; அனுஷ்டிக்க அனுமதியில்லை!

போர் வெற்றி தினம் அமைதியாக நடைபெறும் என்கிறார் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா

கொழும்பு, மே 18
முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தினமல்ல. அவ்வாறு இருக்கையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை இன்று அனுஷ்டிக்க அனுமதியில்லை.
- இவ்வாறு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.
அவர்

பக்கம் 02

## தமிழரசுவுக்கும் தடை

யாழ்ப்பாணம், மே 18
யாழ்ப்பாணம் தமிழரசுக் கட்சியின் தலைமையகம் மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமாரின் இல்லத்தில் இன்று திங்கட்கிழமை நிகழ்வுகள் எதனையும் நடத்த முடியாதவாறு நீதிமன்றில் தடை உத்தரவு பெறப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் அமைந்துள்ள இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைமையகத்தில் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் நிகழ்வு இடம்பெறுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.
தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் யாழ்ப்பாணம் மூன்றாம் குறுக்குத் தெருவில் அவர் வசிக்கும்

பக்கம் 04

## மக்களை ஒன்றுகூட்டி நிகழ்வு நடத்தவும் முன்னணிக்குத் தடை

யாழ்ப்பாணம், மே 18
நாடு முழுவதும் அபாயகரமான கோவிட் - 19 நோயைக் கட்டுப்படுத்த நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை மீறி யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவில் பொதுமக்களை ஒன்று திரட்டி நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குத் தடை விதித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.
யாழ்ப்பாணம் பொலிஸார் தாக்கல் செய்த மனு மீதே இந்தக் கட்டளையை நீதிமன்றம் பிறப்பித்திருக்கிறது.
மனுவில்

பக்கம் 04

## ராஜிதவுக்கு பி.சி.ஆர்.

கொழும்பு, மே. 18
விளக்கமறியலில் முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது எனச் சிறைச்சாலை திணைக்கள வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.
ராஜித சேனாரத்ன குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் சரண

பக்கம் 02

## எமது மக்கள் அனுபவித்த பேரவலங்களுக்கு நீதி தேடும் போராட்டத்தைத் தொடருவோம்!

வீடுகளிலேயே சுடரேற்றி நினைவு கூர சுமந்திரன் அழைப்பு

கொழும்பு, மே 18
இந்தத் துன்பகரமான நினைவு நாளை தமிழ் மக்கள் அனைவரும் தத்தமது வீடுகளிலேயே இருந்து, சுடரேற்றி நினைவு கூர வேண்டும் என்று கோரியிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன்.
இது தொடர்பாக அவர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-
முள்ளிவாய்க்கால் அவலம் நேர்ந்து 11ஆவது வருட நினைவு நாள் இன்று.
பத்து வருடங்களுக்கு முன்னர் முதலாவது வருட நினைவு நாள் நெருங்கிய போதுதான் நான் முதன் முதலாக நாடாளுமன்றத்துக்குள் நுழைந்தேன். என்னுடைய நாடாளுமன்றக் கன்னிப் பேச்சு மே 6ஆம் திகதி நிகழ்த்தப்பட்டது. அதிலே; இறந்தவர்களை

பக்கம் 02

## நினைவேந்தல் என்று கூறிக்கொண்டு புலிகளை எவரும் நினைவுகூரமுடியாது

அரசு திட்டவட்டம்

கொழும்பு, மே 18
முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்று கூறிக்கொண்டு தமிழீழ விடுதலைப்புலிகளை எவரும் நினைவுகூர முடியாது.
- இவ்வாறு அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.
அவர் மேலும் கூறுகையில், இலங்கையில் இராணுவ வெற்றி தினம் அல்லது போர் வெற்றி தினம் என அங்கீகரிக்கப்பட்ட தினம் உள்ளது. அது மே மாதம் 19 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும்.
ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற பயங்கரவாத அமைப்பானது நாட்டில் தடை செய்யப்பட்ட

பக்கம் 02

## இனி...

மான வழக்கு என்றதும் – அது யாது என்று ஊகிப்பதில் உங்களுக்குக் கஷ்டம் ஒன்றும் இருக்காது என்பதை என்னால் ஊகிக்க முடியும்.

நாடாளுமன்ற கலைப்பு, பொதுத் தேர்தலுக்கான வர்த்தமானி அறிவிப்பு ஆகியவற்றுக்கு எதிராக நாளை நீதிமன்றத்துக்கு வருகின்ற அடிப்படை உரிமை மீறல் மனு வழக்குகள்தாம் அவை என்று நீங்கள் கருதுவது புரிகின்றது.

அது சரியான ஊகம்தான். அது சரி முக்கியமான இந்த வழக்கு, முக்கியமான இடத்திலேயே நடக்கவிருக்கின்றது என்று நான் கூறுவது எதை என்று புரியாமல் நீங்கள் முழுசுவதும் எனக்குப் புரிகின்றது.

வழக்கமாக நடைபெறும் உயர்நீதிமன்றத்தில்தானே...! அதில் என்ன வேறுபாடு, என்ன மாற்றம் என்று நீங்கள் கேட்கலாம்.

வழக்கமான பிரதம நீதியசர்கள் உட்பட ஐந்து நீதியசர்கள்தான். ஆனால் வழக்கு நடைபெறும் இடம்தான் வேறு.

நீதிமன்றங்கள் அமைந்துள்ள கொழும்பு ஹல்ஸ்டோர்ப் கட்டத் தொகுதியில்தான் வழக்கு.

ஆனால், வழமையாக உயர்நீதிமன்றம் வழக்கு விசாரணைகளுக்காகக் கூடும் இடமல்ல. சம்பிரதாயபூர்வ அமர்வுக்காகக் கூடும் மண்டபத்தில் விசேடமான விசாரணை அமர்வுக்கான ஏற்பாடுகள் முதல் தடவையாகக் செய்யப்பட்டிருக்கின்றன.

சமூக இடைவெளியைப் பேணி நீதிமன்றம் கூட வேண்டும். நீதியரசர் குழாமின் 5 நீதியரசர்கள் அமரும் பிரதான மேசையே – மேடையே – தள்ளித் தள்ளித் கதிரைகள் போட்டு ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். போதாக்குறை ஏழெட்டு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீது ஒரே சமயத்தில் விசாரணை. ஒவ்வொன்றின் சார்பிலும் ஒவ்வொரு ஜாம்பவான்கள் சட்டத்தரணிகளாகக் களத்தில் குதிக்கின்றனர். அவர்களும் சமூக இடைவெளி விட்டு அமர வேண்டும்.

அத்தோடு மனுதாரர்களும் இருபது பேருக்கு மேல். தேர்தல் ஆணையாளர்கள், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் போன்ற பிரமுகர்கள் எதிர் மனுதாரர்கள். மிக முக்கிய வழக்கு என்பதால் பார்வையாளர்களாக மூத்த – சிரேஷ்ட – சட்டத்தரணிகள் எல்லோரும் வருவார்கள். அனைவரும் சமூக இடைவெளியிட்டு அமர்ந்து வழக்கு விசாரணையை நோக்க வேண்டும் என்றால் வழமையான அமர்வு நீதிமன்றக் கட்டட வசதி போதுமானது அல்ல.

அதனால் புதிய ஹல்ஸ்டோர்ப் நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் ஐந்தாவது – கடைசி மாடியில் – இருக்கும் விசாலமான மண்டபத்தில் – இந்த வழக்கு விசாரணை மன்றம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. அந்த மண்டபத்துக்கு உரிய குறியீட்டு இலக்கம் 501.

முழு நீதிமன்றக் கட்டத் தொகுதியின் ஒரு மாடியில் – ஐந்தாவது தட்டில் – பெரும்பாலும் முழுக் கட்டட விஸ்தீரத்துக்கு பரந்து கிடக்கின்றது இந்த மண்டபம்.

இங்கு ஆக உயர்நீதிமன்றத்தின் சம்பிரதாய பூர்வ அமர்வுகள்தான் நடைபெறுகின்றமை வழமை. அது என்ன சம்பிரதாயபூர்வ அமர்வு?

புதிய உயர்நீதிமன்ற, மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் பிரதம நீதியரசர்கள், நீதியரசர்கள், தலைவர்கள் நீதிமன்ற ஆயத்தில் பணிக்கு வருகின்ற போது அவர்களை வரவேற்கவும், ஓய்வு பெற்றுச் செல்லும் போது பிரியாவிடை அளிக்கவும், புதிய சட்டத்தரணிகளை சத்தியப்பிரமாணம் செய்வித்து உள்வாங்கவும் உயர்நீதிமன்றம் சம்பிரதாய பூர்வமாகக் கூடுவதுண்டு. இது போன்ற வேறு விசேட சந்தர்ப்பங்களுமுண்டு. அவற்றுக்கான விசேட நீதிமன்ற அமர்வுகள் இந்த மண்டபத்திலேதான் கூடும்.

நாளை வழக்குக்கு அந்த மண்டபம் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றது. சம்பிரதாயபூர்வ அமர்வுக்காக கூடும் ஓரிடத்தில் வழக்கு விசாரணைக்காக உயர்நீதிமன்றம் கூடுவது இதுவே முதல் தடவை.

நாளை அந்த வரலாற்றுத் திருப்புமுனை வழக்கில் வழக்கை ஆரம்பித்து முன்மொழிந்து முதல் சட்டவாதத்தை முன்வைக்கப் போகின்றவர் ஒரு தமிழர் என்ற முறையில் நாம் பெருமைப்படலாம். ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன்தான் அந்த வாதத்தை ஆரம்பிக்கின்றார். நாளை காலை சுமார் மூன்று மணி நேரம் அவரது சட்டவாதம் நீளும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த அடிப்படை உரிமை மீறல் தொடர்பான மனுக்கள் ஏழும் நீதிமன்றத்தில் ஒன்றாக எடுக்கப்படவிருக்கின்றன. ஏழு வழக்குகளினதும் பிரதான சட்டத்தரணிகள் நேற்றுப் பகல் ஓரிரு மணித்தியாலங்கள் தங்களுக்குள் காணொலியில் 'கொன்பரன்சிங்' உரையாடல் நடத்தி, வழக்கை எப்படிக் கொண்டு செல்வது என்பது குறித்துத் தங்களுக்குள் தீர்மானித்தனர். யார், எதுபற்றி வாதிடுவது, யார் ஆரம்பிப்பது, யார் தொகுப்பது என்பவை உட்பட பல விடயங்களை அவர்கள் பேசி முடித்து விட்டார்கள்.

அந்த உரையாடலில்தான் முக்கிய பொறுப்பை சுமந்திரனிடமே விட்டுவிடும் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால், தப்பித் தவறி இந்த வழக்கிலும் சுமந்திரனின் வாதத்திறமையும் அதனால் அவர் பெயரும் மேலோங்கி விடும் என்று பெறாமைத்தீ கொண்டலையும் தரப்புகள் நேற்றே சுமந்திரனை விட பெரிய சட்டத்தரணிகள் எல்லாம் இந்த வழக்குக்கு வருகின்றனர், இந்த வழக்கைப் பொறுத்தவரை சுமந்திரன் பெறும் ஜுஜுபிதான் என்ற தங்களின் பிரசாரத்தை ஆரம்பித்து விட்டன.

அப்படியே இருந்து விட்டுப் போகட்டும். நமக்கென்ன?

இன்னொரு விடயம். தற்போது நடைமுறையில் இருக்கும் ஊரடங்கு சட்டரீதியானது என்கின்றார் பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண. இல்லை, அது சட்டவிரோதமானது என்கிறார் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

ஆனால் அதற்கு எதிராக வழக்குப் போடப் பயந்து, மனித உரிமை ஆணைக் குழுவிடம் முறைப்பாடு கொடுத்துவிட்டு நைஸாக ஒளித்துவிட்டார் சுமந்திரன் என்று கதை பேசுபவர்கள் பலருண்டு.

அதற்கும் முடிவுகட்ட களத்தில் அவர் இறங்குகின்றார் என்று தகவல். ஊரடங்கும் சட்டத்தின் பெயரால் தமது வாகனத்தைப் பொலிஸாரிடம் பறிகொடுத்த ஒருவர் சார்பில் அடிப்படை உரிமை மீறல் மனுவின் பேரில் களமிறங்குகின்றார் சுமந்திரன். பெரும்பாலும் அடுத்த வாரத்தில் நீதிமன்றில் இது தொடர்பான வழக்குத் தாக்கலாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சரி, இங்கு கஜேந்திரகுமார், சுகாஷ், மணி வண்ணன் என்று சட்டத்தரணிகளுக்கு எதிராகவே சமூக இடைவெளி விவகாரம் தொடர்பான வழக்கு முறையற்ற விதத்தில் பாய்ந்திருப்பதாக மக்கள் கருதுகின்றனர். பொலிஸ் சட்டத்தை அராஜகமாகப் பயன்படுத்துகின்றது என்பது வெறுமனே உணரத்தக்க விவகாரம். அதுவும் தமிழ் மக்களின் உணர்வுடன் தொடர்புபட்ட ஒரு விடயத்தில் பொலிஸ் சட்டத்தைக் கையில் எடுத்திருக்கின்றது.

நமது சட்ட ஜாம்பவானும், அவரது உள்ளூர் ஜீனியர்களும் என்ன செய்யப் போகின்றார்கள்? வெற்றிலை வைத்தால்தான் வருவார்களா? அல்லது சக சட்டத்தரணிகள், சக அரசியல்வாதிகள், அதுவும் தமிழர் தேசியத்திற்காய் தங்களை விட உரமாயும் உரத்தும் குரல் எழுப்பும் சக சாத்வீகப் போராளிகள் என்ற விடயத்தைக் கவனத்தில் கொண்டு இதற்குள் விரையமாட்டார்களா? அவர்களின் பதில்களைப் பார்த்திருக்கேன் – வாசகர்களாகிய உங்களுக்குத் தருவதற்கு...!

–மின்னல்–

## எமது மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நினைவு கூரும் உரித்து அனைவருக்கும் உண்டு. அது தடுக்கப்படக்கூடாது என்று அன்று அந்த நாடாளுமன்றப் பேச்சிலே கூறியமை மட்டுமன்றி. தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் நாடாளுமன்றத்தில் இதைச் சொல்லி வற்புறுத்தி வந்துள்ளேன்.

இந்தத் தடவை நாடாளுமன்றம் இல்லாத காரணத்தினாலே பகிரங்க அறிக்கை மூலமாக மட்டும்தான் இதைச் சொல்ல முடிகின்றது.

நாங்கள் ஒன்று சேர்ந்து இந்த நாளை நினைவு கூர முடியாமல் இருக்கின்றது. ஆனாலும் இந்த நாளை தமிழ் மக்கள் எவரும் எக்காலத்திலும் மறக்க முடியாது.

இந்த இறுதிப் போரிலே மரணித்த அனைவருக்கும் சிரம் அஞ்சலி செலுத்துகின்றோம்.

உறவுகளை இழந்தவர்களுக்கு எங்கள் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்தத் துன்பகரமான நாளை தமிழ் மக்கள் அனைவரும் தத்தமது வீடுகளிலேயே இருந்து சுடரேற்றி நினைவு கூரும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தப் பேரவலங்களுக்கு பொறுப்புக் கூறல் மூலம் நீதி கிட்ட வேண்டும் என்ற எங்களுடைய பல மட்டங்களிலான போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்ற வாக்குறுதியையும் இந்தச் சந்தர்ப்பத்தில் வழங்க விரும்புகின்றேன்.

இவ்விடயத்தில் – தமிழர்களுக்கு நீதி வழங்கும் முயற்சியில் – சர்வதேசத்தின் பங்களிப்பு இன்னும் உரிய முறையில் கிட்டாமை குறித்து விசனமடைகின்றோம் – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நினைவேந்தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோவால் முன்வைக்கப்பட்ட விண்ணப்பத்துக்கு அமையவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன், சட்ட ஆலோசகர் சட்டத்தரணி கனரட்ணம் சுகாஷ், சட்ட ஆலோசகர் சட்டத்தரணி நடராசா காண்டீபன், யாழ்ப்பாணம் மாநகரசபை உறுப்பினர் வரதராஜன் பார்த்திபன், யாழ்ப்பாணம் மாநகரசபை உறுப்பினர் தனுசன், யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் கிருபாகரன், கனகசபை விஸ்ணுகாந்த், சுதாகரன், தமிழ்மதி ஆகிய 11 பேரையும் எதிர்வரும் 14 நாள்களுக்கு தனிமைப்படுத்துமாறு நீதிவான் தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு குருநகர், புனித ஜேம்ஸ் தேவாலயம், மற்றும் தமிழாராய்ச்சி மாநாட்டு நினைவிடம் ஆகிய இடங்களில் நேற்று முன்தினம் அஞ்சலி நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

இந்த நிகழ்வுகள் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி நடத்தப்பட்டமையால் இந்தக் கட்டளை நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

## அமைதியாக..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறவுகளை மே 18 –இன்று எமது வீடுகளில் சுடர் ஏற்றி –அஞ்சலித்து அமைதியுடன் நினைவேந்துவோம்.

– இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

இறுதிப் போரில் அரச படைகளின் பலவிதமான தாக்குதல்களினால் எமது உறவுகள் பலர் முள்ளிவாய்க்கால் மண்ணில் சாகடிக்கப்பட்டனர். சாட்சியங்கள் எதுவுமின்றி போர் விதிகளுக்கு முரணாக இறுதிப் போர் இந்த மண்ணில் நடைபெற்றது.

மஹிந்த ஆட்சியில் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட இந்தத் திட்டமிட்ட கொடூரத் தாக்குதல்கள் தொடர்பில் அப்போது நான் நாடாளுமன்றில் சுட்டிக்காட்டியிருந்தேன். போரை உடன் நிறுத்தும்படியும் ஆட்சியில் இருந்த அரசைக் கோரினேன். ஆனால், தமிழ் மக்களுக்குப் பெரிய இழப்புகளைக் கொடுத்துத்தான் அரசு போரை முடிவுக்குக் கொண்டுவந்தது.

பெருந்தொகையான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர், பலர் காணாமல் ஆக்கப்பட்டனர். எமது மக்களின் சொந்த வீடுகள், சொத்துகள் அழிக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு நீதியைப் பெற்றுத்தருமாறு சர்வதேச சமூகத்தை இன்று நாம் கோரி நிற்கின்றோம்.

தமிழின அழிப்புத் தினமாகவும், தமிழ்த் தேசிய துக்க நாளாகவும் இன்று (மே 18) அறிவிக்கப்பட்டுள்ளது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் வருடந்தோறும் நினைவேந்தல் நிகழ்வு நடைபெறும். இதில் தமிழ் மக்கள், பொது அமைப்புகள், அரசியல் கட்சிகள் என்று அனைத்துத் தரப்பும் ஒற்றுமையுடன் ஓரணியில் திரண்டு பங்கேற்பார்கள். ஆனால், நாட்டில் தற்போது உயிர்க்கொல்லி நோயான – தொற்று நோயான கொரோனா வைரஸ் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்ற நிலையில் கடந்த வருடங்கள் போன்று இவ்வருடமும் முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் அனைவரும் பங்கேற்று உயிரிழந்த எமது உறவுகளை நினைவு கூர முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனவே, தமிழர்கள் அனைவரும் இன்று மாலை 6 மணி தொடக்கம் 7 மணி வரையான காலப்பகுதியில் இறுதிப் போரில் இழந்த எமது உறவுகளை வீடுகளில் சுடர் ஏற்றி – அஞ்சலி செலுத்தி நினைவுகூர வேண்டும். இவ்வாறு நாம் செய்வதன் ஊடாக போரின்போது உயிரிழந்த எமது உறவுகளின் ஆத்மா சாந்தியடையும் – என்றார்.

## நினைவேந்தல் என்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பாகும். அப்படியென்றால் அவர்களின் நிகழ்வுகளும் நாட்டில் தடை செய்யப்பட்டதாகவே இருக்க முடியும். முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் எனக் கூறிக்கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளை எவரும் நினைவுகூர முடியாது.

ஆனால், போரில் உயிரிழந்த அப்பாவி பொதுமக்களை அவர்களின் குடும்ப உறவினர்கள் வீடுகளில் நினைவுகூர முடியும். பொது இடங்களில் எவரும் ஒன்றுகூடி நினைவுகூர முடியாது – என்றார்.

## ராஜிதவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டைந்ததை அடுத்து மே 13 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

வெள்ளை வான் ஊடக சந்திப்பு தொடர்பாக நீதவான் நீதிமன்றத்தால் அவருக்கு வழங்கப்பட்ட பிணை, மேல் நீதிமன்றத்தால் இரத்துச் செய்யப்பட்டதை அடுத்தே அவர் கைதானார்.

இதனையடுத்து கொழும்பு பிரதம நீதவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது, அவரை எதிர்வரும் 27 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. இதன்படி நீர்கொழும்பு பல்லன்சேனவிலுள்ள இளம் குற்றவாளிகளைச் சீர்திருத்தும் மையத்துக்கு அவர் அழைத்துச் செல்லப்பட்டார்.

'கொரோனா' வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில், புதிதாக விளக்கமறியலில் வைக்கப்படும் கைதிகள், சுய தனிமைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே உத்தரவிடப்பட்ட சிறைச்சாலைகளில் அடைக்கப்படுகின்றனர். இதற்கமையவே ராஜிதவும் தற்போது சுய தனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

21 நாட்களுக்குப் பின்னர் அவருக்கு பி.சி.ஆர் பரிசோதனை நடத்தப்படும் என சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## அங்கீகரிக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் கூறுகையில் –

கொரோனா வைரஸின் தாக்கத்தையடுத்து இராணுவ வெற்றி தினம் இம்முறை மிகவும் அமைதியான முறையில் நடத்தப்படவே தீர்மானிக்கப்பட்டுள்ளது. வழமையாக ஆடம்பர நிகழ்வுகள் பலவற்றை உள்ளடக்கி, அணிவகுப்புகள் நடத்தி போர் வெற்றி தினத்தைக் கொண்டாடுவோம்.

ஆனால், இப்போது நாட்டின் நிலைமையில் எம்மால் ஆடம்பரமாக நிகழ்வுகளை முன்னெடுக்க முடியாது. ஆகவே, அமைதியாக வெற்றி தினத்தைக் கொண்டாட அரசு தீர்மானம் எடுத்துள்ளது.

அதற்காக இராணுவத்தை நாம் மறந்துவிட்டோம் என்ற அர்த்தம் அல்ல. இந்த நாட்டின் அமைதிக்காக உயிர்த் தியாகம் செய்த அனைத்துப் பாதுகாப்புப் படையினரையும் நாம் நினைவுகூர்ந்து அவர்களுக்கான நாளாகக் கொண்டாடுவோம்.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர நினைவுத் தூபி முன்னிலையில் போர் வெற்றி தினம் அனுஷ்டிக்கப்படும் – என்றார்.

# அரசமைப்பை ஜனாதிபதி மதிப்பதில்லை

## அனுரகுமார குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 18

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டின் அரசமைப்புச் சட்டம், வர்த்தமானி அறிவித்தல், சட்டம் ஆகியவற்றை வெறும் காகித ஆவணங்களாக மாற்றியுள்ளார் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

புதிய நாடாளுமன்றம் மே மாதம் 14 ஆம் திகதி கூடும் என ஜனாதிபதி வர்த்தமானி மூலம் அறிவித்திருந்ததாகவும் அந்த தினம் கடந்துள்ள நிலையில் அவரது அடுத்த நடவடிக்கை என்ன என்பதை உடனடியாக நாட்டுக்கு தெரியப்படுத்த வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

புதிய நாடாளுமன்றம் கூட்டப்படும் என அறிவிக்கப்பட்ட திகதி கடந்துள்ள சூழ்நிலையில், புதிய நாடாளுமன்றத்தை கூட்டும் திகதியோ, தேர்தலை நடத்தும் திகதியோ உறுதியாக இது வரை அறிவிக்கப்படவில்லை எனவும் அனுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

# தேர்தலில் சாதனை படைப்பதற்கு தயாராகி வரும் ராஜபக்ஷ குடும்பம்

கொழும்பு, மே. 18

எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் ராஜபக்ஷவினர் இலங்கை அரசியலில் சாதனை ஒன்றை படைக்கத் தயாராகி வருகின்றனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, மகன் என நான்கு பேர் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படுவதன் மூலம் இந்த சாதனை நிகழ்த்தப்பட உள்ளது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, குருணாகல் மாவட்டத்தில் போட்டியிட உள்ளதுடன் அவரது மூத்த புதல்வர் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் போட்டியிட உள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரான அமைச்சர் சமல் ராஜபக்ஷ அம்பாந்தோட்டையில் போட்டியிட உள்ளதுடன் அவர புதல்வரும் ஊவா மாகாண முன்னாள் முதலமைச்சருமான சீந்திர ராஜபக்ஷ மொனராகலை மாவட்டத்தில் போட்டியிட உள்ளார்.

இவர்கள் நால்வரும் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டால், இலங்கை நாடாளுமன்றத்தில் இரு ஜோடி தந்தை மற்றும் மகன்கள் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட முதல் முறை என வரலாற்றில் பதியப்படும்.

இதற்கு முன்னர் பெற்றோர் மற்றும் பிள்ளைகள் ஒரே நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த போதிலும் மேற்கூறிய பிரதிநிதித்துவத்தை போன்று இருந்ததில்லை.

இதனை தவிர ராஜபக்ஷ குடும்பத்தை சேர்ந்த கோட்டாபய ராஜபக்ஷ நாட்டின் ஜனாதிபதியாக பதவி வகித்து வருகிறார். அத்துடன் அவரது சகோதரான மஹிந்த ராஜபக்ச பிரதமராகவும் முக்கிய அமைச்சு பதவிகளையும் வகித்து வருகிறார். அவரது மூத்த சகோதரான சமல் ராஜபக்ச அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் முக்கிய அமைச்சராவார்.

இந்த நிலையில் அடுத்த புதிய நாடாளுமன்றத்தில் மகிந்த ராஜபச்ஷ, சமல் ராஜபக்ஷ, நிருபமா ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, சீந்திர ராஜபக்ஷ ஆகியோர் அங்கம் வகிப்பார்கள்.

ராஜபக்ஷ குடும்பத்தின் முக்கியஸ்தரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகருமான பசில் ராஜபக்ஷ இரட்டை குடியுரிமையை கொண்டுள்ளதால், அடுத்த நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கா விட்டாலும் அரசாங்கத்தில் முக்கிய பொறுப்பை வகிப்பார் எனக் கூறப்படுகிறது.

# சுகாதாரத்துறை ஆலோசனையை அரசு கவனத்தில் கொள்ளவில்லை

## நளிந்த ஜயதிஸ்ஸ குற்றச்சாட்டு



சுகாதார துறையினர் வழங்கிய ஆலோசனைகளை கவனத்தில் கொள்ளாமலேயே அரசு நாட்டை மீண்டும் திறந்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

முடிந்தளவுக்கு விரைவில் தேர்தலை நடத்தி அதிகாரத்தை கைப்பற்றவேண்டும் என்ற தேவையே அரசுக்கு இருக்கின்றது. மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கவேண்டிய பொறுப்பில் இருந்து அரசு விலகிக் கொண்டுள்ளது.

சுகாதாரத்துறையினரின் அர்ப்பணிப்புகள் காரணமாகவே நாட்டில் ஓரளவுக்குக் கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த முடிந்துள்ளது.

சுகாதாரத்துறையினரின் ஆலோசனைக்கு அமைய அரசாங்கம் செயற்படுவதில்லை என்பதால், சுகாதார துறையினர் அசௌகரியத்திற்கு உள்ளாகி இருப்பதாகவும் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார்.

# பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு போதிய பாதுகாப்பு காணப்படுகின்றதா?

## சசிகலா ரவிராஜ் கேள்வி

கொழும்பு, மே. 18

போர் நிறைவடைந்து 11 ஆண்டுகளாகின்ற நிலையில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு போதிய பாதுகாப்புச் சூழல் காணப்படுகின்றதா என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளர் சசிகலா ரவிராஜ் கேள்வி எழுப்பியுள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் 11ஆம் ஆண்டு நிறைவையொட்டி அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை வாழ் தமிழ் சமூகத்தினரின் வாழ்வில் ஆறாத ரணமாக இரத்தக் கறையை பதித்து விட்டுச் சென்ற துயர தினமாக மே 18ஆம் திகதி இருக்கின்றது. போரின் இறுதிக் கட்டத்தில் கொத்துக் கொத்தாக அப்பாவித் தமிழர்கள் பலியெடுக்கப்பட்ட நாள் இதுவாகும்.

ஆண்டுதோறும் மரணித்த மக்களுக்காக நாம் நினைவேந்தலைச் செய்து வருகின்றபோதும் இம்முறை உலகத்தொற்று நோயான கொரோனாவால் சில தடைகள் ஏற்பட்டுள்ளன. எனினும், எம்மக்கள் கொல்லப்பட்டு, மண்ணோடு மண்ணாகிய இந்நாளில் அவர்களை நினைவு கூருவது நம் எல்லோரதும் இதயபூர்வ கடமையாகும்.

முள்ளிவாய்க்கால் படுகொலை, சிறுபான்மைச் சமூகத்தினருக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட கொடூர இனப்படுகொலை நிகழ்வாகும்.

மே 18 ஆம் திகதி என்பது இலங்கையில் வாழும் எம்;மை மட்டுமல்லாது உலகளாவிய ரீதியில் வாழும் எமது உறவுகளின் இதயங்களையும் கீறி ரணப்படுத்திய துயரமிக்க நாளாகும்.

பெண்கள், சிறுவர்கள், குழந்தைகள், முதியோர்கள் என்ற பாரபட்சம் இன்றி அனைவரையும் பலி கொண்டது இந்நாள். போர் விதிகளின் பிரகாரம் பாதுகாக்கப்பட வேண்டியவையாகவுள்ள, பாடசாலைகள் மருத்துவமனைகள், வழிபாட்டுத் தலங்கள் என்பன மீது சரமாரியாக குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

அவ்விடங்களில் தஞ்சமடைந்து தம் உயிரைப் பாதுகாத்து கொள்ளச் சென்ற பெருந்தொகை மக்கள் பரிதாபகரமாக மடிந்தார்கள். கணவரை இழந்த மனைவிமாரும் மனைவியரை இழந்த கணவன்மாரும், பிள்ளைகளை இழந்த பெற்றோரும் பெற்றோரை இழந்த பிள்ளைகளும் ஆயிரக்கணக்கில் நிர்க்கதியாகியுள்ளனர்.

இறுதிக்கட்டப்போரில் தமக்கு நடந்த கொடூரங்களுக்கு நீதி கிடைக்காதா என்பதே உடமைகளையும் உறவுகளையும் இழந்து நடைப்பிணம் போன்று இன்று வாழ்ந்துகொண்டிருக்கும் எமது மக்களன் ஏக்கமாகும்.

நீதி கிடைத்தால் மட்டும் போதுமா? இந்த 11 வருடங்களில் அவர்களது அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டனவா? வாழ்வாதாரப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டனவா? அவர்களது பொருளாதார மேம்பாட்டிற்கு செய்யப்பட்ட ஊக்குவிப்புகள் தான் என்ன? அவை திருப்திகரமானவையா?

பெண்கள் தலைமைத்துவ குடும்பங்களில் பெண்களுக்கு போதிய பாதுகாப்புச் சூழல் காணப்படுகின்றனவா? அங்கங்களை இழந்த உறவுகளுக்கு தமது நாளாந்த கடமைகளை மேற்கொள்ளும் வகையில் ஓரளவுக்கேனும் தொழிநுட்பம் சார்ந்த வசதிகள் பெறக் கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளனவா?

இவற்றுக்கான பதில் இன்றுவரையில் கிடைக்கவில்லை. இவற்றுக்குத் தீர்வளிப்பதன் மூலமே பாதிக்கப்பட்ட எம்மக்களின் மனங்களை ஓரளவேனும் ஆற்றுப்படுத்த முடியும் - என்றுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு
விளம்பரம் (8cm x 5cm) பிரசுரிக்க!
கருப்பு வெள்ளை – ரூபாய் 500/-
முழு வர்ணம் – ரூபாய் 1000/-
தொடர்புகளுக்கு: 076 443 8622
kalaikkathiradvt@gmail.com

தோட்டக்காணி தேவை
மரக்கறித் தோட்டம் செய்யக்கூடிய வளமான செம்மண் உள்ள காணி குத்தகைக்குத் தேவை.
இரசாயண உரங்கள், கிருமிநாசினிகள் ஆகியவை பாவிக்காத காணி விரும்பத்தக்கது.
உரிய முறையில் பராமரித்து குத்தகை முடிவில் நல்ல நிலையில் திருப்பிக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 078 284 5000

புழுக்கொடியல் விற்பனைக்கு.
சுத்தமான சுகாதாரமான முறையில் பொதியிடப்பட்ட புழுக்கொடியல் 1/2kg, 1/4kg பைக்கற்றுகளில் விற்பனைக்கு உண்டு.
தேவைப்படின் வீடுகளுக்கும் விநியோகம் செய்யப்படும். (மேலதிக கட்டணத்துடன்)
தொடர்புகளுக்கு: 076 100 5277

வீட்டுத்தோட்ட விதைகள் விற்பனைக்கு
வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான விதைகள் விற்பனைக்கு உண்டு.
வெண்டி, பயிற்றை, கத்தரி, கீரை, தக்காளி, பாகல், மிளகாய், சோளம், பூசணி, முள்ளங்கி, பீற்றூட், புடோல், கறிமிளகாய், சிறகவரை.
(வீடுகளிற்கும் விநியோகிக்கப்படும்.)
தொடர்புகளுக்கு: 077 411 4422

வேலைவாய்ப்பு – இரவுக் காவலாளி
யாழ். நகரப்பகுதியில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு இரவுக்காவலாளி ஒருவர் தேவை.
முழுநேரமாக தங்கிநின்று வேலைசெய்தால் உணவு, தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 307 8799

# நமது பார்வை



உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – onlinekathir.com

## என்ன செய்யப் போகின்றனர் தமிழர்கள்?

மீள் நல்லிணக்கம், இன ஒற்றுமை, பரஸ்பரம் புரிந்துணர்வு, ஐக்கியம் பற்றி எல்லாம் அரசியல் தலைவர்கள் பேசுவது வெறும் 'உல்டா' விளையாட்டுத்தான்.

இந்தத் தேசத்தில் இனங்களுக்கு இடையில் ஒற்றுமையுணர்வு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளும் திருப்பணியை நாட்டின் சீருடைத் தரப்பு மிக உன்னிப்பாகவும் கவனமாகவும் செய்து கொண்டிருக்கும் என்று முழுமையாக நம்பலாம்.

முள்ளிவாய்க்கால் பேரவல நினைவேந்தல் நிகழ்வில் சமூக இடைவெளியைப் பேணவில்லை என்ற காரணத்தை நீதிமன்றில் காட்டி யாழ்.பொலிஸார் பெற்றிருக்கும் உத்தரவு, இது *'நம்ம காவலர்கள் அல்லர், ஆக்கிரமிப்புப் பொலிஸ்தான்'* என்ற உணர்வை இனப்பிரச்சினையில் பாதிக்கப்பட்ட தரப்பாகத் துவண்டு போயிருக்கும் தமிழர் தம் மனதில் ஆழமாகப் பதிக்கும் வேலை யன்றி வேறில்லை.

தமிழ் மக்களின் உணர்வோடும், உயிரோடும் கலந்த உணர்ச்சி மயமான விடயம் முள்ளிவாய்க்கால் பேரவலம்.

முள்ளிவாய்க்காலில் முற்றுப் பெற்ற அந்தப் பேரவலத்துக்கு பதினொரு வருடங்கள் கடந்தும் நீதி வழங்கப்படவில்லை, நியாயம் செய்யப்படவில்லை. அந்த வெஞ்சினத்தில் சிலிர்த்துக் கிடக்கின்றது தமிழினம்.

இப்போது அந்தப் பேரவலத்தின் நினைவு கூரலிலும் தனது சிங்களப் பேரினவாத மேலாதிக்கத் திமிரை வெளிப்படுத்தி நிற்கின்றது சீருடைத்தரப்பு. இது வரலாற்று மீள்நிகழ்வு. சிங்களச் சீருடைத் தரப்பு திருந்தவே மாட்டாது என்பதை உணர்த்தும் பழைய பாங்கு.

நாட்டின் மதுபானச் சாலைகள் இப்போது திறக்கப்பட்ட நாள் கொண்டு நாட்டில் சமூக இடைவெளியை நடைமுறைப்படுத்தும் ஒழுங்கு – சீத்துவம் – இங்கு கொடிகட்டிப் பறக்கின்றது. அது பற்றி எல்லாம் நடவடிக்கை எடுப்பதற்குலாயக்கற்ற பொலிஸாருக்கு தமிழ் மக்களின் உணர்வெழுச்சி விவகாரத்தில் மட்டும் நோண்டுவதற்குத் தாராளமாக வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது.

இந்த ஓரவஞ்சனைப் போக்கு – பொலிஸ் அராஜகம் – இது நமது சமூகத்தின் காவல் படை என்ற எண்ணத்தை தமிழர் தரப்புக்குத் தராது. இது ஆக்கிரமிப்புப் பொலிஸ்தான் என்ற கருத்தைத்தான் அவர்களுக்கு தந்து நிற்கின்றது.

இங்குள்ள மக்களின் நியாய பூர்வமான – உண்மையான – நீதியான – மனக்கருத்துக்களை உள்வாங்காமல், தென்பகுதி பேரினவாத எஜமானர்களின் கருத்தையும், சிந்தனையையும், சட்டம் – ஒழுங்கைப் பேணுதல் என்ற பெயரில் திணிப்பதற்கான கூலிப்படையே பொலிஸ் என்ற எண்ணத்தைத்தான் நினைவேந்தல் நடத்திய தமிழ் மக்கள் மீதான – தலைவர்கள் மீதான – பொலிஸ் நடவடிக்கை எடுத்தியம்பி நிற்கின்றது.

இத்தகைய அட்டூழியம் அரங்கேறும், அதுதான் சிங்கள, பௌத்த பேரினவாத மேலாதிக்கத்தின் பரவணிப் பண்பியல்பு என்பதை நேரத்துடன் புரிந்து கொண்டு சிரேஷ்ட சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா இது விடயத்தில் நேரடியாக எச்சரிக்கை விடுத்திருந்தார். இது தொடர்பில் கடந்த புதனன்று அவர் கூறியிருந்த கருத்து நோக்கத்தக்கதாகும். அவர் கூறியவை வருமாறு:–

*"நேற்றைய தினம்[ புதனன்று] யாழ்ப்பாணம் செம்மணியில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவஞ்சலியை சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தபடி மிகச் சிறிய எண்ணிக்கையில் நடத்தியவர்கள் தொடர்பில் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக தெரிவிக்கப்பட்டிருப்பது மிகவும் வேடிக்கையானது.*

*"தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள் எடுக்கப்படுமானால் அவை முழுக்க முழுக்க சட்ட விரோதமானவை என்பதோடு அப்பட்டமான அடிப்படை உரிமை மீறலாகவும் அமையும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.*

*"ஊரடங்கு தளர்த்தப்பட்டிருக்கும் சூழ்நிலையில் சமூக இடைவெளியை கடைப்பிடிப்பது பற்றிக் கவலைப்படாமல் கணிசமான எண்ணிக்கையில் நெருக்கமான பொதுமக்கள் காணப்படும் காட்சிகளைத் தொலைக்காட்சிகளின் செய்திச் சேவைகளில் அடிக்கடி காணமுடிகின்றது.*

*"இத்தகைய சம்பவங்களை கட்டுப்படுத்துவதிலும் தடுப்பதிலுமே பொலிஸாரின் கவனமும் தலையீடும் கட்டாயமாகத் தேவைப்படுகின்றது என்பதை வலியுறுத்தி கூறவேண்டி உள்ளது"* – என்று கூறியிருந்தார் ஸ்ரீகாந்தா.

பொலிஸார் செய்தது சட்ட ரீதியாகச் சரியா என்பது முதல் கேள்வி. அதற்கு தமிழர் சமூகம் காட்டப்போகும் எதிர்வினை யாது என்பது அடுத்த கேள்வி.

நாடாளுமன்றத்தைக் கலைத்தமைக்கு எதிராகவே சட்ட வாளைச் சுழற்றுவதில் முன்னணியில் நிற்கும் தமிழ்ச் சமூகம், இங்கு பொலிஸாரின் இந்த அராஜகத்துக்கு எதிராக என்ன செய்யப் போகின்றது?

ஒரு கட்சியின் – தரப்பின் – அரசியல் பிரச்சினை என்று கூறி விடயத்தைக் கைகழுவிட்டு நழுவிப் போகப் போகின்றதா? அல்லது முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்காக ஒருமித்த தமிழர் தேசமாய் எழுந்தமை போல அந்த நினைவேந்தலுக்கு எதிரான நடவடிக்கையாக சிங்கள தேசத்தின் சிரமேற் பணியாகச் செயற்பட்டிருக்கும் ஸ்ரீலங்கா பொலிஸாருக்குத் எதிராகத் தமிழர் தேசமாய் ஒன்றுபட்டு சீறி எழப்போகின்றதா?

தமிழர் சமூகம் பார்த்து நிற்கின்றது.

## அமைச்சர்கள் அதிகாரபூர்வ வாகனங்களை பயன்படுத்த தேர்தல் ஆணையம் ஆட்சேபம்

கொழும்பு, மே 18

அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் முன்னாள் ராஜாங்க அமைச்சர்கள் தங்களது அதிகாரபூர்வ வாகனங்களை தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தக் கூடாது என்று தேர்தல் ஆணைக்குழு, அரசாங்கத்திற்கு எழுத்து மூல உத்தரவு பிறப்பித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் இந்த உத்தரவு குறித்து அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்கள் மற்றும் முன்னாள் அமைச்சர்கள் அதிகாரபூர்வ வாகனங்களை ஒரு மாதத்திற்கு ஒரு லட்சம் ரூபா என்ற வாடகை அடிப்படையில் பயன்படுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வாகனங்கள் மட்டுமன்றி அதிகாரபூர்வ இல்லங்களையும் ஒரு மாதத்திற்கு ஒரு லட்சம் ரூபா என்ற அடிப்படையில் வாடகைக்கு வழங்க அமைச்சரவை பத்திரம் மூலம் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

எனினும் இந்த நடவடிக்கைகள் தேர்தல் சட்டத்திற்கு முரணானது எனதேர்தல் ஆணைக்குழு பிரதமருக்கு அறிவித்துள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டில் ஆட்சியில் இருந்த அரசாங்கம் இவ்வாறான ஓர் அமைச்சரவை பத்திரம் மூலம் வாகனங்களை பயன்படுத்தியமையை முன்னுதாரணமாகக் கொண்டே தமது அரசாங்கம் இந்த அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பித்தது என பிரதமர் தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்தை தேர்தல் அதிகாரிகள் எதிர்க்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த கால மற்றும் தற்போதைய அமைச்சரவை பத்திரங்கள் உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கிவிரிவான விளக்கக் கடிதமொன்றை தேர்தல் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு அமைச்சரவை, அமைச்சரவைச் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

## உள்ளூர் தயாரிப்புத் துப்பாகியுடன் கோமரங்கடவலவில் ஒருவர் கைது



திருகோணமலை - கோமரங்கடவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கூட்டிக்குளம் பிரதேசத்தில் உள்ளூர் துப்பாக்கியுடன் நேற்று இளைஞரொருவரைக் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த நன் ஹாமிகே இர டில்ஷான் (23வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உள்ளூர் துப்பாக்கியை பயன்படுத்தி இவர் மிருகங்களை வேட்டையாடி வருகிறார் எனப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலை யடுத்து இவர் தொடர்பில் பொலிஸார் கவனம் செலுத்தி வந்தனர்.

இந்நிலையில் இவர் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு வேட்டையாடுவதற்காக காட்டுப் பகுதிக்குச் செல்லும் போது இவரைத் தாம் கைது செய்தனர் என்ப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன் ஆஜர் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இவர் தொடர்பில் முன் குற்றங்கள் ஏதாவது இருக்கின்றனவா என விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் கோமரங்கடவல பொலிஸார் தெரிவித்தனர்.

## மீண்டும் வளி மாசடைதல்

நாட்டில் ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டதன் பின்னர், வளி மாசடைவு வீதம் மீண்டும் உயர் மட்டத்தை அடைந்துள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம்தெரிவித்துள்ளது.

ஊரடங்கு சட்ட அமுலாக்கத்தின் காரணமாக, வாகனங்கள்பயணிக்காமை மற்றும் கைத் தொழிற்சாலைகள் இயங்காமை என்பன காரணமாக வளி மாசடைவு வீதம் வீழ்ச்சியடைந்திருந்தது.

கைத்தொழிற்சாலைகளின் இயக்கம், வாகன பிரயாணங்கள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளமையினால் வளி மாசடைவு மீண்டும் அதிகரித்துள்ளது.

இதன்படி, கொழும்பில் தற்போது வளி மாசடைவு தன்மையானது 50 வீதமளவில் அதிகரித்துள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

### மக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச் செயலாளர், சட்டத்தரணிகள் நடராசா காண்டீபன், விஸ்வலிங்கம் மணிவண்ணன், கனகரட்ணம் சுகாஷ் மற்றும் வரதராசா பார்த்திபன், வாசுகி, கிருபாகரன், தனுன், விஷ்ணுகாந்த் மற்றும் தமிழ்மதி ஆகிய 11 பேரின் பெயர்கள் இடப்பட்டு அவர்கள் நிகழ்வை நடத்தத் தடை உத்தரவு வழங்குமாறு கோரப்பட்டது.

அந்தக் கோரிக்கையை ஏற்று அரசால் தடை விதிக்கப்பட்டுள்ள மக்களை ஒன்று திரட்டும் நிகழ்வுகளை நடத்தவேண்டாம் என்று மேல் குறிப்பிட்ட 11 பேருக்கும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

### கொரோனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

நேற்று 21 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியமை கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 981ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது. இதுவரை 538 பேர் முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 9 பேர் உயிரிழந்துள் ளனர். 434 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

### முள்ளிவாய்க்கால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சின் அறிவித்தலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு: –

நாட்டில் பிரிவினை வாதத்தை உருவாக்கிய தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதப்போராட்டம் இலங்கையில் தடை செய்யப்பட்ட போராட்டமாகவே கருதப்பட்டு வருகின்றது.

பயங்கரவாதிகள் என அடையாளப்படுத்தப்படும் தமிழீழ விடுதலைப் புலிகளை நினைவுகூரும் எந்த நிகழ்வுகளும் இலங்கையில் இடம்பெறக்கூடாது. எனவே, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்படக்கூடாது. வடக்கு, கிழக்கில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நிகழ்வுகளை நடத்த ஆயத்தங்கள் முன்னெடுக்கப்படுகின்றனவா என்பதை ஆராயப் புலனாய்வுத்துறை மற்றும் மேலதிக இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது.

இறுதிப் போரில் உயிரிழந்த பொதுமக்கள் குறித்து நினைவேந்தல் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்றால் அவ்வாறு இறந்தவர்களின் குடும்பத்தினர் குறித்த பகுதியில் உள்ள பொலிஸ் நிலையங்களில் அனுமதியைப் பெற்று அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் – என்றுள்ளது.

### தமிழரசுவுக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லத்தில் நிகழ்வு நடத்தப்படவிருந்தது.

இந்த நிகழ்வுகள் தொடர்பில் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்த நிலையில் அவற்றைத் தடை செய்ய நீதிமன்றக் கட்டளை பெறப்பட்டுள்ளது. மீறி நிகழ்வு இடம்பெற்றால் அதில் பங்கேற்கும் அனைவரும் தனி மைப்படுத்தலுக்குட்படுத்தப்படுவார்கள் என்று யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

# உலகில் வேகமாக பரவும் கொரோனா 47.40 லட்சத்தை தாண்டியது பாதிப்பு

உலகில் கொரோனா நோயால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 47 லட்சத்து 50 ஆயிரத்தை தாண்டியுள்ளது. நோய் தொற்றிலிருந்து குணமானோரின் எண்ணிக்கையும் 18 லட்சத்து 26 ஆயிரமாக அதிகரித்துள்ளது.

சீனாவின் வுகான் பகுதியிலிருந்து பரவி, உலகையே ஆட்டுவித்து கொண்டிருக்கிறது கொரோனா தொற்று நோய். நாள்தோறும் ஆயிரணக்கில் மக்கள் பாதிக்கப்படுவது தொடர்கதையாக இருப்பதால், பாதிப்பு எண்ணிக்கை 47 லட்சத்து 50 ஆயிரத்தை தாண்டியுள்ளது.

இதேபோல் பலி எண்ணிக்கையும் ஆயிரகணக்கில் இருப்பதால், உலகில் பலியானோரின் எண்ணிக்கை 3 லட்சத்து 10 ஆயிரத்தை கடந்துள்ளது.

உலகம் முழுவதும் மருத்துவமனைகளில் 26 லட்சத்துக்கும் மேற்பட்டோர் சிகிச்சை எடுத்து வரும் நிலையில், இதுவரை மருத்துவ சிகிச்சையில் குணமடைந்தோரின் எண்ணிக்கை 18 லட்சத்து 20 ஆயிரத்தை தாண்டியுள்ளது.

உலகில் கொரோனாவின் மையமாக திகழும் அமெரிக்காவில் பாதிப்பு 15 லட்சத்தை கடந்துள்ள நிலையில், பலி எண்ணிக்கை 90 ஆயிரத்தை தாண்டியுள்ளது.

ஆரம்பத்தில் கொரோனா பெரிதும் பரவாமல் இருந்த ரஷ்யாவில் தற்போது நாள்தோறும் ஆயிரகணக்கில் பாதிப்பு உறுதி செய்யப்பட்டு வருகிறது. இதனால் அமெரிக்காவுக்கு அடுத்து அதிகம் பாதிக்கப்பட்ட நாடாக ரஷ்யா உருவெடுத்துள்ளது.

அந்நாட்டில் கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 2 லட்சத்து 80 ஆயிரத்தையும், பலி எண்ணிக்கை 2 ஆயிரத்து 600ஐயும் கடந்துள்ளது.

ஸ்பெயின், பிரிட்டன், பிரேசில், இத்தாலி ஆகிய நாடுகளில் கொரோனா பாதித்தோரின் எண்ணிக்கை 2 லட்சத்துக்கு அதிகமாக உள்ளது. இதில் பிரிட்டன், இத்தாலியில் பலி எண்ணிக்கை 30 ஆயிரத்தையும், ஸ்பெயினில் 27 ஆயிரத்தையும், பிரேசிலில் 15 ஆயிரத்தையும் பலி தாண்டியுள்ளது.

பிரான்ஸ், ஜெர்மனி, துருக்கி, ஈரான் நாடுகளிலும் பாதிப்பு ஒரு லட்சத்துக்கு அதிகமாகவும், பலி எண்ணிக்கை கணிசமாகவும் உயர்ந்துள்ளது.

## இஸ்ரேலுக்கான சீனத் தூதர் டெல் அவிவில் மர்ம மரணம்



ஜெருசலேம்,மே18

இஸ்ரேலுக்கான சீனத் தூதர் டு வெய், மர்மமான முறையில் இறந்து கிடந்தார் என இஸ்ரேலின் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலுக்கான சீனத் தூதர் டு வெய் (வயது 58) பெப்ரவரி மாதம் கொரோனா வைரஸ் தொற்று நோய்ப் பரவலுக்கு மத்தியில் இஸ்ரேலின் தூதராக நியமிக்கப்பட்டார்.

அவர் முன்பு உக்ரைனுக்கான சீனாவின் தூதராகப் பணியாற்றினார். இந்நிலையில், டெல் அவிவ் நகரத்தின் வடக்கே உள்ள அவரது வீட்டில் மர்மமான முறையில் அவர் இறந்து கிடந்தார் என இஸ்ரேலின் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தூதரின் திடீர் மரணத்திற்கான காரணங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இதுகுறித்து விசாரணை நடத்தி வருவதாக இஸ்ரேலியப் பொலிஸார் தெரிவித்தனர்.

## கொரோனா விவகாரத்தை டிரம்ப் கையாளுவதில் மோசமான தோல்வி



சீண்டுகின்றார் ஒபாமா

கொரோனா விவகாரத்தை கையாளுவதில் அதிபர் டிரம்ப் மோசமான தோல்வியை சந்தித்து விட்டார் என அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஒபாமா மீண்டும் குற்றஞ்சாட்டி உள்ளார்.

அமெரிக்காவில் கறுப்பினத்தவர்கள் அதிகம் படிக்கும் பல கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் பட்டமளிப்பு விழாவில் காணொலிக் காட்சி வாயிலாக அவர் உரையாற்றினார். அப்போது இந்த குற்றச்சாட்டை கூறிய அவர், குறைந்தது, கொரோனாவை கட்டுப்படுத்துவது போல நடிக்கக்கூட அவருக்குத் தெரியவில்லை என டிரம்பை சூசமாக சாடினார்.

ஆட்சியாளர்களின் முகத்திரைகளை கொரோனா தொற்று அம்பலப்படுத்தி விட்டதாக கூறிய அவர், அமெரிக்காவின் மானத்தை வாங்கும் வகையில் தாறுமாறான கேள்விகளை ஆட்சியில் இருப்பவர்கள் எழுப்புவதாகவும் டிரம்பை மறைமுகமாக குத்திக்காட்டினார்

## உலக சுகாதார நிறுவனத்துக்கு மீள நிதி அளிக்க டிரம்ப் முடிவு?

உலகசுகாதாரநிறுவனத்துக்குநிறுத்தி வைத்த அமெரிக்காவின் நிதியுதவியை மீண்டும் வழங்கத் தொடங்குவது பற்றி டிரம்ப் நிர்வாகம் ஆலோசித்து வருவதாக செய்தி வெளியாகி உள்ளது.

கொரோனா தொற்று விவகாரத்தில் சீனாவுக்கு ஆதரவாக செயல்படுவதாக உலக சுகாதார நிறுவனம் மீது குற்றஞ்சாட்டி அதற்கான நிதியுதவியை நிறுத்துவதாக கடந்த ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி டிரம்ப் அறிவித்தார்.

உலக சுகாதார நிறுவனத்திற்கு இது பெரிய இடியாக அமைந்துவிட்ட நிலையில், இந்த முடிவை மறுபரிசீலனை செய்வதாக டிரம்ப் அறிவித்திருக்கிறார். முன்பு வழங்கப்பட்ட நிதியில் 10 சத விகிதத்தை மீண்டும் வழங்குவது பற்றி அவர் ஆலோசிப்பதாக கூறப்படுகிறது.

ஆனால் இது குறித்து எந்த இறுதி முடிவும் இதுவரை எடுக்கவில்லை என டிரம்ப் டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

## அமெ. – சீன முறுகல் உச்சம்!

# ஜின்பிங்குடன் பேச டிரம்ப் விரும்பவே இல்லையாம்!



கொரோனா வைரஸ் விவகாரத்தில் ஏற்பட்டுள்ள மோதல் காரணமாக சீன அதிபர் ஜின்பிங்குடன் பேச விரும்ப வில்லை என்று அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் கூறினார்.

கொரோனா வைரஸ் தொற்று, சீனாவின் உகான் நகரில் கடந்த டிசம்பர் 1இல் தோன்றியது. இப்போது சுமார் 200 நாடுகளில் பரவி விட்டது. ஏறத்தாழ 46 லட்சத்துக்கும் மேற்பட்டோர் உலகமெங்கும் பாதிப்புக்கு ஆளாகி உள்ளனர். 3 லட்சத்துக்கும் மேலானோர் இறந்தும் உள்ளனர்.

இந்த வைரஸ் தொற்றுநோய்த் தோற்றம் தொடர்பாக அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையே மோதல் உள்ளது. மேலும், சீனா இந்த வைரஸ் பற்றிய தகவல்களை மூடி மறைத்து விட்டதாகவும், சீனா நினைத்திருந்தால் அந்த நாட்டுக்குள்ளேயே இந்த வைரஸைக் கட்டுப்படுத்தி இருக்க முடியும் என்றும் அமெரிக்கா கருதுகிறது.

அமெரிக்காவில் இந்த வைரஸ் 14 லட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு பரவி விட்டது. 88 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை கொன்றும் விட்டது. இதுவரையில் அமெரிக்கா இதுபோன்ற நிலையை சந்தித்தது இல்லை.

இதையொட்டி டிரம்ப் அளித்த பேட்டியின்போது, சீன அதிபர் ஜின்பிங்குடன் இப்போது நான் பேச விரும்பவில்லை. அடுத்து என்ன நடக்கிறது என்று பார்ப்போம் என்று கூறினார்.

அப்போது ஒரு நிருபர், எதற்காக சீன அதிபர் ஜின்பிங்குடன் பேச விரும்பவில்லை என்று கூறுகிறீர்கள்? என கேள்வி எழுப்பினார்.

அதற்கு டிரம்ப் பதில் அளித்தபோது, இந்த ஆண்டு தொடக்கத்தில் செய்யப்பட்ட வர்த்தக ஒப்பந்தத்தின்படி கடந்த ஆண்டை விட நிறைய அமெரிக்க பொருள்களை சீனா வாங்குகிறது. அவர்கள் வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் நிறைய செலவுசெய்கிறார்கள். ஆனாலும் அதற்காக நான் கொஞ்சம் சுவையை இழந்தேன். நீங்கள் புரிந்து கொள்ளலாம் என குறிப்பிட்டார்.

முன்னதாக டிரம்ப் இந்த விவகாரம் தொடர்பாக விரிவாக எடுத்துரைத்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு: -

நான் சீனா உடனான வர்த்தக ஒப்பந்தம் பற்றி பேச விரும்பவில்லை. சீனா நமது பொருல்களை நிறையவே வாங்குகிறது. ஆனால் கொரோனா வைரஸ் சீனாவில் இருந்து வந்தபோது, இந்த வர்த்தக ஒப்பந்தத்தின் மை உலர்ந்து விட்டது. எனவே நான் இந்த வர்த்தக ஒப்பந்தத்தில் சிலிர்த்துப்போய்விடவில்லை.

கொரோனா வைரஸ் தொற்று நோயால் இத்தனை பாதிப்பு ஏற்பட்டு இருக்கக்கூடாது. இது சீனாவில் இருந்து வந்ததுதான். இது வெளி உலகுக்கு பரவுவதற்கு முன்பாகவே தடுத்து நிறுத்தப்பட்டிருக்க வேண்டும். இப்போது 186 நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. ரஷ்யா இப்போது மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. பிரான்ஸ் மோசமாக பாதிக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் ஒவ்வொரு நாட்டையும் பார்க்கிறீர்கள். நீங்களும் பாதிக்கப்பட்டிருப்பவராகக் கூறலாம். - என்று டிரம்ப் கூறினார்.

இது தொடர்பாக வெள்ளை மாளிகை ஊடக செயலாளர் கெய்லி மெக்கானியும் நிருபர்களிடம் பேசினார். அவர், சீனா மீது ஜனாதிபதி விரக்தி அடைந்துள்ளார். சீன ஜனாதிபதியுடன் எப்போது மீண்டும் பேசத்தொடங்குவது என்பதை ஜனாதிபதியிடம் விட்டு விடுகிறேன். கொரோனா வைரஸ் தொற்றுநோயின் அம்சத்தை அறிந்திருப்பது முக்கியமானது. ஆனால் அந்த தகவல்கள் மெதுவாகத்தான் சீனாவால் உலக சுகாதார நிறுவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. ஹாங்காங்கில் உள்ள ஒரு பேராசிரியருக்கு இன்னும் கொரோனா வைரஸ் மரபணு வரிசை முறை வழங்கப்படவில்லை. சீனாவில் இருந்து எதற்காக விமானங்கள் வெளியே செல்ல அனுமதித்தார்கள்? பிற நாடுகளின் விமானங்களை ஏன் தடுத்து நிறுத்தினார்கள்? என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், இந்த தொற்றுநோய் சீனாவில் இருந்து வந்தது என்பதை அறிவோம். அந்த தகவலை ஏன் அவர்கள் பகிர்ந்து கொள்ளவில்லை? இது ஏற்கத்தக்கது அல்ல. எனவேதான் ஜனாதிபதி சீனா மீது விரக்தி அடைந்துள்ளார். இந்த பிரச்சினையை நான் அவரிடமே விட்டுவிடுகிறேன் என்று கூறினார்.

ஆனால் கொரோனா வைரஸ் பரவல் விவகாரத்தை சீனா மூடி மறைத்து விட்டது என்ற அமெரிக்காவின் குற்றச்சாட்டை அந்த நாடு தொடர்ந்து மறுத்து வருகிறது. அதுமட்டுமல்ல, உகானில் உள்ள வைராலஜி நிறுவனத்தின் ஆய்வுக்கூடத்தில் தோன்றியதுதான் இந்த வைரஸ் என்று அமெரிக்கா தொடர்ந்து வலியுறுத்தி கூறுவதன் மூலம் இந்த விவகாரத்தை திசை திருப்ப முயற்சிப்பதாகவும் சீனா குற்றம் சாட்டுகிறது.

# இந்தியாவில் ஊரடங்கு மே 31 வரையில் நீடிப்பு!

## கட்டுப்பாடுகள், தளர்வுகள் குறித்த அறிவிப்பு

புதுடெல்லி,மே 18

மே 31 திகதி வரை நாடு முழுவதும் ஊரடங்கு நீடிப்பு செய்து, ஊரடங்கு வழிமுறைகளை மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டது.

பொதுமுடக்கம் இன்று இரவுடன் முடிவடையும் நிலையில் மேலும் 2 வாரங்களுக்கு நீட்டித்து மத்திய அரசு அறிவித்துள்ளது. நாடு முழுவதும் பொதுமுடக்கம் மே 31 ஆம் திகதி வரை நீட்டித்து மத்திய அரசு அறிவித்துள்ளது. 4ஆவது கட்ட ஊரடங்குக்கான புதிய வழிமுறைகளை மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

சிவப்பு, ஓரேஞ்ச், பச்சை என மண்டலம் வாரியாக வழிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது. நாளை முதல் அமலுக்கு வரும் புதிய கட்டுப்பாடுகள், தளர்வுகள் குறித்து மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது. கொரோனா காரணமாக ஊரடங்கு அமல்படுத்தி இன்றோடு 54 நாள்கள் ஆன நிலையில் மேலும் ஊரடங்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

மே 31ஆம் தேதி வரை ஊரடங்கு நீட்டிப்பு வழிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

* பொது இடங்களில் பணியாற்றும் இடங்களிலும் முககவசம் அணிவது கட்டாயம்.
* கட்டுப்பாட்டு பகுதிகளில் அத்தியாவசியப் பணிகளுக்கு மட்டுமே அனுமதி.
* இரவு 7 மணி முதல் காலை 7 மணி வரை மக்கள் நடமாட்டத்திற்கு தடை.
* 65 வயதிற்கு மேற்பட்டவர்கள், கர்ப்பிணி பெண்கள், குழந்தைகள் வீட்டிலேயே தங்கி இருக்க உத்தரவு.
* அனைத்து விதமான பயணிகள் விமான சேவைக்கு விதிக்கப்பட்ட தடை தொடரும்.
* பேருந்து பொதுப்போக்குவரத்தை துவங்குவது குறித்து மாநில அரசுகளே முடிவெடுக்கலாம்.
* அலுவலகங்களில் வெப்ப சோதனை, கை கழுவுதல் அவசியம்.
* மருத்துவர், செவிலியர் உள்ளிட்ட மருத்துவ பணியாளர்கள் நடமாட்டத்தை தடுக்க கூடாது.
* பணியாளர்கள் வீட்டில் இருந்து பணியாற்றுவதற்கு முக்கியத்துவம் அளிக்க வலியுறுத்தல்.
* கடைகளுக்குள் 6 அடி இடைவெளியில் வாடிக்கையாளர்கள் நிற்கலாம். 5 பேருக்கு மேல் நிற்க அனுமதி இல்லை.
* பொது இடங்களில் மது,புகையிலைப்பொருள்கள் பயன்படுத்த தடை.
* திருமணம் உள்ளிட்ட சுபகாரியங்களில் சமூக இடைவெளி அவசியம். 50 நபர்களுக்கு மேல் கூட தடை விதிக்கப்படுகிறது.
* பொது இடங்களில் எச்சில் துப்புவது தண்டனைக்குரிய குற்றம் ஆகும்.
* பள்ளி, கல்லூரிகள், பயிற்சி மையங்கள் தொடர்ந்து மூடப்பட்டிருக்கும்.
* அனைத்துவிதமான பயணிகள் விமான சேவைக்கு விதிக்கப்பட்ட தடை தொடரும்.
* சரக்கு வாகனங்கள் மாநிலங்கள் இடையே வந்து செல்ல தடை இல்லை.
* மரணம் உள்ளிட்ட துக்க நிகழ்ச்சிகளில் 20 நபர்கள் மட்டுமே பங்கேற்க அனுமதி.
* கட்டுப்பாட்டு பகுதிகளில் தீவிர கண்காணிப்பு வீட்டுக்கு வீடு ஆய்வு செய்யப்படும்.
* மாநிலங்களுக்கு இடையிலான பேருந்து போக்குவரத்து இரு மாநில சம்மதத்துடன் இயக்கலாம்.
* மெட்ரோ ரெயில் சேவைக்கு விதிக்கப்பட்ட தடையும் தொடர்ந்து அமலில் இருக்கும்.
* விளையாட்டரங்கு, ஸ்டேடியம் திறந்து கொள்ள அனுமதி, பார்வையாளர்களுக்கு அனுமதி இல்லை.
* விமானம், ரெயில் சேவை, திரையரங்குகள், வணிக வளாகங்கள் செயல்பட விதித்த தடை தொடரும்
* வழிபாட்டுத் தலங்கள் மற்றும் மதம் சார்ந்த இடங்களில் பொதுமக்கள் கூட்டமாக கூட தடை நீட்டிப்பு.
* ஒரு மாநிலத்தில் இருந்து மற்றொரு மாநிலத்திற்கு பேருந்து செல்ல நிபந்தனையுடன் அனுமதிக்கலாம்.
* பார்வையாளர்கள் இல்லாமல் விளையாட்டு அரங்குகளை திறக்க அனுமதி.
* கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகள், சிவப்பு மண்டலங்கள் குறித்து மாநிலங்களே முடிவு செய்யலாம்.

- இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவில் கொரோனா பாதிப்புக்குள்ளான 34 ஆயிரம் பேர் நலத்துடன் வீடு திரும்பினர்

இந்தியா முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களில் 34 ஆயிரம் பேர் குணம் அடைந்து , மருத்துவ மனைகளிலிருந்து வீடுகளுக்கு அனுப்பபட்டுள்ளனர்.

கொரோனாவுக்கு எதிரான போரில், மருத்துவ துறையினர் அர்ப்பணிப்பு உணர்வுடன் களத்தில் நின்று, ஒழிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு உள்ளனர்.

மஹாராஷ்டிராவில் முன் எப்போதும் இல்லாத வகையில் ஒரே நாளில் 2 ஆயிரத்து 347 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி ஆகி, பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 33 ஆயிரத்தைத் தாண்டி விட்டது.

மும்பையில் தமிழர்கள் அதிகம் வசிக்கும் தாராவியில், கடந்த 24 மணி நேரத்தில் மட்டும்44 பேர், கொரோனாவால் பாதிக்கப்பட்டனர்.

மஹாராஷ்டிராவுக்கு அடுத்தபடியாக கொரோனா பாதிப்பில், 2 வது இடம் வகிக்கும் குஜராத்தில் வைரஸ் தொற்று உறுதி ஆனோர் எண்ணிக்கை 11 ஆயிரத்தை நெருங்கி உள்ளது.

தமிழகத்தில் கொரோனாவால் 11 ஆயிரத்து 200 க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

டெல்லியை பொறுத்தவரை, 9 ஆயிரத்து 700 ஐ தாண்ட, ராஜஸ்தான், மத்திய பிரதேசம், உத்தரபிரதேசத்திலும் கொரோனா பாதிப்பு, கணிசமாக உயர்ந்துள்ளது.



மேற்கு வங்காளம், ஆந்திரா, பஞ்சாப் மற்றும் தெலங்கானாவிலும் கொரோனாவால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கர்நாடகா , ஜம்மு - காஷ்மீர் , பீஹார் , ஹரியானா, ஒடிசா மற்றும் கேரளாவிலும் கொரோனா பாதிப்பு கணிசமாக உயர்ந்துள்ளது.

ஆயிரம் பேருக்கு மேல் பாதிக்கப்பட்டோர் பட்டியலில், 14 மாநிலங்கள் இடம்பெற்றுள்ளன.

கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக 4 ஆயிரத்து 987 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட , ஒரே நாளில் 120 பேர் வைரஸ் தொற்றுக்கு இரை ஆகி உள்ளனர்.

53 ஆயிரத்து 946 பேர், பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வர, இதுவரை 34 ஆயிரத்து 109 பேர் குணம் அடைந்து, வீடு திரும்பி விட்டனர்.

## கொரோனா வைரஸ்கள் சடலத்திலிருந்து பரவுமா?

கொரோனாவால் இறந்தவர்களின் உடலில் இருந்து தொற்று பரவுமா..? என்ன சொல்கிறார்கள் மருத்துவ நிபுணர்கள்?

கொரோனாவால் இறந்தவர்களின் உடல்களில் இருந்து வைரஸ் தொற்று பரவும் என்ற மூட நம்பிக்கையால், பல இடங்களில் சடலங்கள் அவமரியாதையாக கையாளப்படுவதுடன், அவற்றை அடக்கம் செய்வதிலும் தேவையற்ற தாமதம் ஏற்படுகிறது.

இது குறித்து விளக்கம் அளித்துள்ள மருத்துவ நிபுணர்கள் உயிருள்ள உடலின் செல்களில் மட்டுமே கொரோனாவால் பல்கிப் பெருக முடியும் என்பதை சுட்டிக் காட்டி உள்ளனர், மனித உடலின் செல்களில் இருக்கும் அடினோசைன் டிரைபாஸ்பேட் (adenosine triphosphate) என்ற பயோ கெமிக்கல் எனர்ஜியை பயன்படுத்தியே கொரோனா செல்கள் பெருக்கம் அடைகின்றன.

நோயாளி இறந்தவுடன், ஆக்சிஜன் உள்ளிட்டவற்றின் சப்ளை நின்று விடுவதால், செல்களில் அடினோசைன் டிரைபாஸ்பேட்டின் உற்பத்தியும் நின்று, கொரோனா வைரசுகளின் பெருக் கமும் முடிவுக்கு வந்து விடுகி றது.

அதே சமயம் ஏற்கனவே பெருக்கமடைந்த வைரசுகள் இறந்த உடலில் இருந்தாலும், அவை தும்முதல், இருமுதல் உள்ளிட்டவற்றால் மட்டுமே பிறருக்கு பரவும் என்பதால், இறந்த உடல்கள் வழியாக தொற்று பரவ வாய்ப்பே இல்லை.

எரியூட்டப்படும் நேரத்தில் வெப்பநிலை 1000 டிகிரி செல்சியஸுக்கும் அதிகமாக இருக்கும் என்பதால் வைரசுகள் முற்றிலுமாக அழிக்கப்பட்டுவிடும்.

## உத்தரப்பிரதேசத்துக்குள் தொழிலாளர்கள் தடுப்பை உடைத்துக் கொண்டு நுழைந்தனர்

மத்தியப் பிரதேசத்தில் இருந்து சாலைவழியாக நடந்து வந்த தொழிலாளர்கள் தடுப்புகளை உடைத்துக் கொண்டு உத்தரப்பிரதேசத்துக்குச் சென்றனர்.

தெலங்கானா, ஆந்திரம், மகாராஷ்டிரம், குஜராத் ஆகிய மாநிலங்களில் பணியாற்றிய உத்தரப்பிரதேசத் தொழிலாளர்கள் ஊரடங்கால் வருமானமின்றி ஊர் திரும்பப் போக்குவரத்து வசதியும் இன்றிச் சிக்கித் தவித்தனர்.

இந்நிலையில் கால்நடையாகப் பலநாள்கள் நடந்து மத்தியப் பிரதேசத்தின் ரேவா மாவட்டத்தில் சக்காட் என்னுமிடத்துக்கு வந்தனர். அங்கு உத்தரப்பிரதேச எல்லையில் காவல்துறையினர் இவர்களைத் தடுத்து நிறுத்தினர். இதனால் கோபமடைந்த தொழிலாளர்கள் தடுப்புகளை உடைத்துக் கொண்டு உத்தரப்



பிரதேசத்துக்குள் நுழைந்தனர்.

# ‘மே 18’

## முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை



சிவாலெனின் (மலேசியா)

## உலகத் தமிழர்களின் நினைவில் மாறாத சுவடு

தனக்குச் சொந்தமான நாட்டை அந்த இனத்திடமிருந்து பறித்து, அவர்களை உரிமைக்கு அந்நியமாக்கியதோடு மட்டுமின்றி, ஓர் இனத்தின் வரலாற்றையும் அவர்களின் வாழ்வியல் தொன்மையையும் அழிப்பது உலகின் உச்சக்கட்டமான இன அழிப்பாகும். தங்களின் உரிமைக்குப் போராடியத் தமிழினத்தை முற்றாக அழித்திட இலங்கை அரசு தமிழினத்திற்கு எதிராக கட்டவிழ்த்த கொடுமைகளும் கொடூரங்களும் கொஞ்சம் நஞ்சமல்ல. அஃது வார்த்தையால் விவரிக்க முடியாது வலி நிறைந்தது.

மே 15, 2009, இலங்கை இராணுவத்தால் வழங்கப்பட்ட புகைப்படம். இலங்கை, முள்ளிவாய்க்காலில், மே 18, 2009 இல், தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதி வேலுப்பிள்ளை பிரபாகரனைக் கொன்றதாகவும் சிறுபான்மை தமிழர்களின் தனி நாடு கோரிக்கையை முடிவுக்குக் கொண்டுவருவதாகவும் இலங்கை அரசு அறிவித்தது.

இன அழிப்பு என்பது, மனிதக் குலத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படும் மிக மோசமான அல்லது கொடூரமான குற்றச் செயலாகும். அரசியல், அரசாட்சி உட்பட ஓர் இனத்தின் ஆளுமையும் அதிகாரமும் மேலோங்கும் நிலையில், அங்கு வாழும் சிறுப்பான்மை இனத்திற்கு எதிரான கொடூரங்களும் கொடுமைகளும் அரங்கேறுவது இயல்பாகி விட்டது என்றுதான் கூற வேண்டும்.

அவ்வாறு தன் இனத்தைக் கொடூரமாக அழிக்கும் இனத்திற்கு எதிராக கிளர்ந்து எழும் போது, அஃது உள்நாட்டுப் போராகவோ அல்லது உள்நாட்டு பிரச்சனையாகவோ உருவெடுக்கிறது. அம்மாதிரியான சூழலில் சிறுப்பான்மை மற்றும் அதிகாரமற்ற நிலையில் இருக்கும் இனத்திற்கு எதிராக அதிகாரமும் ஆளுமையும் கொண்டிருக்கும் இனம் புரியும் அட்டூழியங்கள் எழுத்துகளில் விவரிக்க முடியாத ஒன்றாக விளங்குகிறது.

யூதர்களுக்கு எதிராக இட்லர் புரிந்த இன அழிப்பு பெரும் அச்சத்தையும் நினைத்துக்கூட பார்க்க முடியாத சம்பவங்களாகவும் இன்றைக்கும் நினைவுக் கூறுகிறோம். நாஜிக்களால் யூதர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இன அழிப்புதான் கடந்த நூற்றாண்டில் நிகழ்ந்த இன அழிப்பு என நம்மில பலர் கருதிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், உண்மையில் அதற்கு முன்னதாகவே, அதாவது 1915இற்கும் 1920இற்கும் இடையில், சத்தமே இல்லாமல் துருக்கியில் ஓட்டோமான் இனத்தால் ஆர்மீனியர்கள் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்பட்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து ருவாண்



டாவில் இலட்ச ஹூடு இனத்தவர்கள் கொல்லப்பட்டதும் கூட இன அழிப்புதான்.

அதுமட்டுமின்றி, 1932 தொடங்கி 1933 வரையில் உக்ரையினில் சோவியத் ஒன்றியம் ஏற்படுத்திய செயற்கை பஞ்சம் கூட இன அழிப்புதான் என வகை செய்யப்பட்டிருக்கும் நிலையில், 1975 இல் கிழக்குத் தீமோர் மீது இந்தோனேசியப் படையெடுப்பும் இன அழிப்புதான் என்று வகை செய்யப்பட்டுள்ளது. மியன்மாரில், ரோஹிங்கியா இனத்திற்கு எதிராக அந்நாட்டு அரசாங்கமும் அந்நாட்டின் தேசிய இனமும் புரியும் கொடூரங்களையும் கொடுமைகளையும் இந்த உலகம் இன்னமும் வாய் மூடி பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது.

இன அழிப்பு என்பது ஓர் இனத்தைப் போரில் கொல்வதிலும் அவர்களை அடித்து துரத்துவதிலும் சித்திரவதை செய்வதிலும் அடங்கி விடவில்லை. மாறாய், அவ்வினத்திற்கு எதிராக உடல் மற்றும் உள ரீதியாக புரியப்படும் கொடூரமான அல்லது கொடுமையான செயல்களும், இனப் படுகொலைதான்.

மேலும், ஓர் இனத்தின் பிறப்பைத் தடுப்பது, வலுக்கட்டாயமாக வேறு இனக் குழுவோடு சேர்ப்பது ஆகியவையும் இன அழிப்புதான் என, 1948 இல் இனப் படுகொலை குறித்த ஐ.நாவின் தீர்மானத்தில் உள்ளடங்கியுள்ளது. இது 1951 ஜனவரியில் நடைமுறைக்கு வந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்படி இன அழிப்பு என்பது, ஒவ்வொரு காலக் கட்டத்திலும் சத்தமின்றி அரங்கேறிக்கொண்டுதான் இருக்கிறது. அந்த வகையில், உலகத் தமிழர்கள் மத்தியில் ஈழம் மலரும் எனும் பெரும் நம்பிக்கை தொடர்ந்துக் கொண்டிருந்தபோது தான், அந்தக் கொடூரம் நடந்தேறியது. ஆம், சுமார் 10 ஆண்டுகளை எட்டிவிட்ட நிலையிலும், உலகத் தமிழர்களின் இதயங்களில் இன்னமும் குருதி வடிந்துக்கொண்டிருக்கும் மே 18 இன அழிப்புதான் அது.

இலங்கை அரசு அந்நாட்டில் தமிழர்களுக்கு எதிராக மேற்கொண்ட இன அழிப்பின் உச்சம் நடந்தேறிய நாள் தான் இந்த மே 18. பதினொரு ஆண்டுகளுக்கும் முன்னர் முள்ளிவாய்க்காலில், 2009 ஆம் ஆண்டில், இனவாத இலங்கை அரசால் இக்கொடூரம் நடத்தப்பட்டது. சுமார் 40,000 பேர் அப்போது முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டனர் எனக் கூறப்படுகிறது. இவர்களில் பெரும்பான்மையோர் அப்பாவி மக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மக்களைக் கேடயமாக வைத்து, முன் நகர்வினை மேற்கொண்டு புலிகளைச் சூழ்ச்சியால் வீழ்த்திய சிங்கள இராணுவம் அப்பாவி மக்களையும் கொன்று குவித்து மாபெரும் இன அழிப்பிற்கு வித்திட்டது. காலம் காலமாக தமிழ் மக்கள் ஆடிப்பாடி வாழ்ந்த ஊர் எங்கும், அன்றைய தினத்தில் மரண ஓலங்கள் ஒலித்தது, நிற்காமல் தொடர்ந்தது ஆங்காங்கே அழும் குரல்கள். துப்பாக்கி தோட்டாக்களுக்கும் எறிகுண்டுகளுக்கும் பலியானவர்கள் போக, எஞ்சியவர்கள் சித்தம் இழந்து முள்ளிவாய்க்கால் சூன்யமாகிப் போனது.

போர் நடக்கும் போது பள்ளிக்கூடங்கள், மருத்துவமனை, வழிபாடு தலங்கள் உட்பட பொது மக்கள் தஞ்சம் புகும் எவ்விடத்திலும் தாக்குதல் நடத்தக்கூடாது என்பது போர் மரபு. ஆனால், இலங்கையில், உச்சக்கட்ட போரின் போது சிங்கள இராணுவம் உயிரைக் காத்துக் கொள்ள மருத்துவமனையில் தஞ்சம் புகுந்தவர்களையும் விட்டு வைக்காமல் குண்டு மழை பொழிந்து கொன்றது. அவர்களின் நோக்கம், விடுதலை புலிகளை வீழ்த்துவதல்ல. மாறாய், தமிழினம் இருக்கவே கூடாது என்பதற்கு இதுவே தக்க சான்று.

> “இன அழிப்பு என்பது ஓர் இனத்தைப் போரில் கொல்வதிலும் அவர்களை அடித்து துரத்துவதிலும் சித்திரவதை செய்வதிலும் அடங்கிவிடவில்லை. மாறாய், அவ்வினத்திற்கு எதிராக உடல் மற்றும் உள ரீதியாக புரியப்படும் கொடூரமான அல்லது கொடுமையான செயல்களும், இனப் படுகொலைதான்.”



மே 18இல், முள்ளிவாய்க்காலில் தமிழீழ விடுதலை போர் முடிவுக்கு வந்ததாக கூறப்படும் நிலையில் சிங்களப் பெளத்த பேரினவாத அரசாங்கம் சுமார் 15இற்கும் மேற்பட்ட நாடுகளின் உதவியோடு இந்த விடுதலை போரை முடிவுக்கு கொண்டு வந்தது.

(10 பக்கம் பார்க்க)

# முடிவு கிடைக்கும் வரையும் பயணிப்போம்!



**முள்ளிவாய்க்கால் 11ஆம் ஆண்டு நினைவு!**
**முடிந்து செல்கிறது கடந்து செல்கிறது!**
**முடிவில்லாத நீதியும் காணமுடியாத தீர்வும்!**
**முறிந்த பேச்சுவார்த்தைகள் போலவே!**
**முற்றுப்பெறாத கானல்நீராய் கடந்தன!**

**முதுசம் குழந்தை இளைஞர் பெண்களென!**
**முகம்தெரியாமலே எம் உறவுகள் அழிந்தன!**
**முன்னூறாயிரம் எம் மக்கள் அல்லவா!**
**முள்ளுவேலிக்குள்ளே வதைபட்டு கிடந்தனர்!**
**முழு உலகத்திற்கும் அவலத்தை சொன்னோம்!**

**முதலுதவிக்குகூட எவருமே வரவில்லையே!**
**முட்டுக்கொடுத்து அரசுக்கு உதவினார்கள்!**
**முரடர்கள் செய்ததை கண்டிக்கவில்லை!**
**முறை கேடான கொலைவெறி தாண்டவம்!**
**முகமூடிக்காரர்களின் வதைகளுடனே!**

**முதலைக்கண்ணீர் வடித்ததே அயல்நாடும்!**
**முன்னுக்கு வந்து தடுக்கவும் இல்லை!**
**முயன்றவரை நாம் அழியட்டும் என்றுதானே!**
**முடியாட்சி நாடுகளும் மௌனமாய் இருந்தன!**
**முட்டுக்கட்டைகளைத்தகர்த்து தீர்வு பெற!**

**முரடர்கள் செய்த கொடுமைகளுக்கெல்லாம்!**
**முரசம் ஒலிக்கும் நீதி இன்னும் வரவில்லை!**
**முகூர்த்தம் எமக்கு இந்தாண்டும் இல்லை!**
**முரண்பாட்டை தகர்த்து வெல்லுவோம்!**
**முடிவு கிடைக்கும்வரையும் பயணிப்போம்!**

**- அம்பிளாந்துறையூர் அரியம் -**



கலாநிதி நாகலிங்கம் சிவயோகன்

# ஈழத்தின் போர் முடிவு மற்றும் இன அழிப்பு நாள் நினைவு கூர ஒழுங்கான நடைமுறை அவசியம்

ஈழத் தமிழர்களின் எதிர்கால சந்ததியினர் தமது வாழ்நாளில் தம் முன்னோர் ஈழத்தில் பட்ட அவலங்களை மறக்காது அவர்களை நினைவுகூருதல் மிகவும் அவசியமாகும். போர் முடிந்து 10 வருடங்கள் முடிந்த பின்னரும் இந் நிகழ்வுநாளை எவ்வாறு கொண்டாட வேண்டும் என்ற திடமான திட்டம் ஒன்றை எவராலும் நடைமுறைப்படுத்த முடியவில்லை.

எனவே நமது எதிர்கால சந்ததியினரை மனதில் வைத்து அவர்களுக்கு இதனை நினைவுகூரும் முகமாக நிகழ்வுகளை ஒழுங்கு படுத்தி கொடுக்க வேண்டியது நமது கடமையாகும்.

நமது போர் நிறைவுக்கு வந்தது வைகாசி 18, 2009 ஆகும். அதனை எதிர்கால சந்ததியினர் மறக்காது நினைவில் வைத்திருக்க வேண்டுமென்றால் அதனை ஒரே ஒழுங்கு முறையில் எல்லோரும் நடத்த வேண்டும். எனவே நாம் அனைவரும் எந்த நாட்டில் இருந்தாலும் அந்த நாட்டில் வைகாசி மாதம் 18 ஆம் திகதி மலை 5.18 மணிக்கு நினைவேந்தலை சுடர் ஏற்றி ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி நடத்த வேண்டும். ஏன் 5.18 மணியென நீங்கள் சிந்திக்கலாம். வைகாசி என்பது 5 ஆம் மாதமாகும் எனவே வைகாசி 18 என்பதை நேரத்திலும் கடைப்பிடித்தால் மிகவும் நல்லது. அத்துடன் அன்று அனைவரும் எவ்வித களியாட்ட நிகழ்வுகளிலும் ஈடுபடாது உப்பில்லாத கஞ்சி காச்சி உண்ண வேண்டும்.

அந்நாளில் திரு மண நிகழ்வுகளோ, திருவிழாக்களோ, களியாட்ட நிகழ்வுகளோ நடத்துவதை அல்லது பங்குபற்றுவதைத் தவிர்க்க வேண்டும். இவ்வாறு வைகாசி மாதம் 18 ஆம் திகதி மாலை 5.18 மணிக்கு எல்லோரும் தத்தமது நாடுகளில் அன்றைய தினம் கஞ்சி மாத்திரம் சாப்பிட்டு இந் நாளை உணர்வுடன் நினைவுகூர வேண்டும்.

ஒன்றாகக் கூட முடியாதவர்கள் தத்தமது வீடுகளில் அதே நேரம் சுடர் ஏற்றி மௌன அஞ்சலி செலுத்தி தமது குழந்தைகளுக்கு போர் பற்றிய கதைகளைக் கூறி மரியாதை செலுத்தலாம்.

இந்நாளில் போர் சம்பத்தமான பேச்சுகள், கட்டுரை, கவிதை, நடன நிகழ்வுகளையும் நடத்தலாம். எந்த நாட்டில் வசிக்கிறார்களோ அந்த நாட்டில் நினைவு தூபியொன்றை மறைந்தவர்கள் நினைவாக நிறுவி இங்கும் கூடி நிகழ்வுகளை நடத்தலாம். இவ்வாறு ஒரே ஒழுங்கு முறையில் எல்லா ஈழத் தமிழரும் செய்து வரவேண்டும். இதுவே மறைந்தவர் களுக்கு நாம் செலுத்தும் மரியாதையுமாகும்.

northern PC PARK
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# தனியார் துறையை அரசு பாதுகாக்கத் தவறிவிட்டது

## ஹர்ஷ டி சில்வா குற்றச்சாட்டு

கொரோனா வைரஸ் தொற்று பரவலை அடுத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள தனியார் துறையினரைச் சேர்ந்தவர்களை அரசு பாதுகாக்க தவறிவிட்டதாக ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சாட்டியுள்ளது.



இது குறித்து ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஹர்ஷ டி சில்வா, தனியார் துறையில் பணியாற்றும் ஏராளமான ஊழியர்கள் தற்போது வேலை இழந்து வருகின்றனர் எனக் கூறினார்.

குறைந்தபட்ச ஊதியம் 14,500 அல்லது அடிப்படைச் சம்பளத்தின் பாதியை ஊழியர்களுக்கு வழங்குமாறு கோரப்பட்டாலும், சம்பளத்தைச் செலுத்த முடியாது என்று தெரிவித்து நிறுவனங்கள், தொழில் ஆணையாளருக்கு கடிதம் எழுதியுள்ளன என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

மேலும் குறிப்பாக 83 ஆடைத்தொழில் நிறுவனங்கள் சம்பளம் கொடுக்க முடியவில்லை என்று கூறிக் கடிதம் எழுதியுள்ளதாகவும் ஹர் டி சில்வா குறிப்பிட்டார்.

இதேவேளை, கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசால் வழங்கப்படும் 5,000 ரூபா மானியத்தின் வெளிப்படைத்தன்மை குறித்து சந்தேகங்கள் எழுந்துள்ளதாகக் குறிப்பிட்ட ஹர்ஷ டி சில்வா, தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு அரசியல் நலன்களுக்காக இந்த தொகை வழங்கப்படுவதாகவும் குற்றம் சாட்டினார்.

# எமக்காக இன்னுயிரைத் தியாகம் செய்தோருக்காக நீதி தேடுவோம்

## நினைவேந்தல் நாளில் உறுதி கொள்வோம் என்கிறார் முன்னாள் எம்.பி. சரவணபவன்

நீதி தேடிய இந்த நெடிய, இடரிய பயணத்தில் ஒவ்வொரு தமிழனும் பங்கெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். எமது உறவுகளுக்காக - எமக்காக தங்கள் இன்னுயிரை தியாகம் செய்தவர்களுக்காக, இந்தப் பேரவலத்தின் பின்னரும் எஞ்சியிருக்கும் நாம் தான் நீதி தேட வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கோரிக்கை விடுத்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் இறுதி நாள் இன்றாகும். இதனை முன்னிட்டு அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே, அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழர்களின் வாழ்வில் குருதி தோய்ந்த சரித்திரம் எழுதப்பட்ட நாள் இன்று. மனிதாபிமானத்துக்கான போர் என்று பன்நாடுகளுக்கு பகிரங்க அறைகூவல் விடுத்து, ஒட்டுமொத்த தமிழினத்தையும் மனிதாபிமானமின்றி கொன்றொழித்த கொடுந் துயர் நாள். பன்நாட்டுச் சட்டங்கள் போர் விதிமுறை மீறல்கள் என்று எவற்றைப் பட்டியலிட்டுள்ளதோ அத்தனை மீறல்களையும் புரிந்து நடத்தப்பட்ட போர் முடிவுக்கு வந்த நாள்.

சாவுகளைக் கண்டு துவந்து விடவில்லை. அவற்றிலிருந்து நாம் மீண்டு வந்திருக்கின்றோம். நினைவுகளை நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும். இந்த நினைவுகளினூடாக, முள்ளிவாய்க்கால் நிலப் பரப்பில் பறித்தெடுக்கப்பட்ட உயிர்களின் சாவுகளிற்கு நீதி தேடிய பயணத்தில் ஆக்ரோசமாகப் போராட வேண்டியிருக்கின்றோம்.



கொல்லப்பட்ட உயிர்கள் எமக்கு மீளக் கிடைக்கப் போவதில்லை. ஆனாலும் அந்த உயிர்களை கொன்றெடுத்தவர்களுக்கு தக்க தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும். இந்தத் தண்டனைகள், எதிர்காலத்தில் இவ்வாறானதொரு மனிதப் பேரவலம் நிகழாது என்பதை உறுதிப்படுத்தும் வகையில் அமைய வேண்டும்.

நீதி தேடிய இந்த நெடிய - இடரிய பயணத்தில் ஒவ்வொரு தமிழனும் பங்கெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். எமது உறவுகளுக்காக - எமக்காக தங்கள் இன்னுயிரை தியாகம் செய்தவர்களுக்காக, இந்தப் பேரவலத்தின் பின்னரும் எஞ்சியிருக்கும் நாம் தான் நீதி தேட வேண்டும்.

நீதிக்கான பயணத்தின் ஓர் அங்கமாக, நினைவேந்தல்களை கடைப்பிடிக்க வேண்டும். எமது தார்மீகக் கடமையைப் பிறர் மீது சுமத்துவதை விடுத்து - சாக்குப் போக்குச் சொல்லி தட்டிக் கழிப்பதை விடுத்து, செவ்வனே நிறைவேற்ற வேண்டும். ஈழத் தமிழினம் தனது ஒன்றிணைந்த எழுச்சியை வெளிப்படுத்த, முள்ளிவாய்க்கால் மண்ணில் மூச்சடங்கியோருக்காக வீடுகளிலிருந்து நினைவுகூர வேண்டும் - என்று அந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


சசிகா லேணர்ஸ்



முறையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்.)

விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புகளும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுப் பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத் தரப்படும்.

தலைமை காரியாலயம்.
இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
HotLine - 077 722 6847
021 221 7678
077 614 0361
Sasika Learners
Sasika Driving Schoolgmail.com

THE SASIKA LEARNERS

அரச அதிகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

DS NO - 882

கிளை நிறுவனங்கள் -

வேலணை
வங்களாவடிச் சந்தி,
வேலணை
021 221 5472
070 301 3012

காரைநகர்
021 225 2454
070 510 2484

கே.கே.எஸ்.வீதி,
மல்லாகம்.
021 224 3393
070 301 3014

பண்டத்தரிப்பு
021 225 2333
071 255 4135

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021 225 1664
070 301 3016

பருத்தித்துறை வீதி,
நெல்லியடி
021 226 0999
071 775 0999

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு
கோபுர வீதி,
யாழ்ப்பாணம்
(போதனா வைத்தியசாலை
பின்புறமாக)
021 221 5472
07 301 3012






படம் 1
வி. சலோமி - தரம் 6
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி



படம் 2
அ. க. ரிாளன் - தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

இந்த இரண்டு சித்திரங்களும் இறுதிப் போட்டிகுத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.
இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு –
**‘சமூக இடைவெளி’**

**நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் ‘தேயிலைத் தோட்டம்’ எனும் தலைப்பில் சித்திரங்களைவரைந்துஅனுப்பியிருந்தனர்.**

**தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிகமாகத் தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்தவர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.**

ம. அட்சையன் - தரம் 3
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

ம. யதோட்சயன் - தரம் 8
யா/ மத்திய கல்லூரி

டி. ஹரிஸ்மன் - தரம் 8
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி

லனுஜன் நவரட்ணம் - தரம் 3
**North Bridlewood Junior Public School, Scarboough, Canada**

இ. கார்த்திகன் - தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

டி. அபிலாஷ் - தரம் 8
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி

உ. ஆராதனா - தரம் 2
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

ஜெ. மிஷேல் - தரம் 2
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

எஸ். சாருன் - தரம் 3
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

உ. ரோஷித் - தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

எம். ஐ. எவ். ஹுமைரா - தரம் 10
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

எம்.ஆர்.எம்.ராத் - தரம் 9
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

ஏ. மதுஷிகா - தரம் 7
தி/ சிறி சண்முகா இந்து மகளிர் கல்லூரி

தி. கோவெழிலன் - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

லோ. நித்திலா - தரம் 4
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

உ. அமிஷாதனா - தரம் 6
தி/ சிறி சண்முகா இந்து மகளிர் கல்லூரி

எம். சி. ஜோசுவா - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

அ. அறிவுஆதித்தன் - தரம் 9
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

மயூரன் தேனுகா - தரம் 10
யா/ வேலணை மத்திய கல்லூரி

அன்றியா தக்ஷரா காண்டீபன் - தரம் 2
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

அருள்நாத் அக்சயன் - தரம் 6
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

திலகராஜ் திலக்சயன் - தரம் 5
உடுவில் மகளிர் கல்லூரி

எட்ரியன் லுகி ஜோன் - தரம் 8
ஓகேஜ சர்வதேச பாடசாலை, வத்தளை

சி. சிவகலை - தரம் 4
யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்

றொபின்சன் ஷெர்வின் - தரம் 4
பம்பலப்பிட்டி சென் பீற்றர்ஸ் கல்லூரி, கொழும்பு

த. கபிலாஷ் - தரம் 8
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

ச. பவினா - தரம் 2
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

த. யதுனேஷ் - தரம் 8
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

எஸ். சிவசாகித்தியன் - தரம் 7
யா/ மகாஜனாக் கல்லூரி

எம். ஹனுசியன் - தரம் 4
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

கசிந்திரா கிரிஸ்பின் - தரம் 5
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

என். கொட்வின் - தரம் 4
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

அறிவுச்செல்வன் அறிவுஅரங்கன் - தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

விஜயநிதி கருன் - தரம் 7
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

## காலைக்கதிர் Kalaikkathir

**சமூக இடைவெளி**




**இன்று (18/05/2020) தலைப்பு**
**சமூக இடைவெளி**

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623**

# தமிழினப் படுகொலை நினைவு தினத்தை அனைவரும் உணர்வோடு அனுஷ்டிப்போம்

## தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை அழைப்பு

**யாழ்ப்பாணம்,மே.18**

**களத்திலும், புலத்திலும், விசேடமாக தமிழகத்திலும் வாழும் தமிழர்கள் அனைவரும் இம்முறை முள்ளி வாய்க்கால் தமிழினப் படுகொலையின் நினைவு தினத்தினை தங்கள் இருப்பிடங்களில் இருந்து அனுஷ்டிக்கு மாறு தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை வேண்டுயுள்ளது.**

இது தொடர்பாக தமிழ் தேசியப் பண்பாட்டுப் பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் எஸ்.நிராந்தன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

இன்று புலத்திலும், களத்திலும், ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ள இந் நிலையில் மே - 18 முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் 11 ஆவது ஆண்டு நினைவு தினத்தினை அனுஷ்டிக்க வேண்டிய தார்மீகக் கடமையில் நாம் அனைவரும் உள்ளோம்.

எம் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களினால் எம் இனத்தின் விடுதலைக்கான உயரிய போராட்டம் பாரிய எழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டு சர்வதேசமே வியந்து பார்க்கும் அளவுக்கு பரிணாம மடைந்து எமக்கான இறுதி இலக்குகளை எட்டவிருக்கின்ற நிலையில் ஸ்ரீலங்கா பேரினவாத அரசினதும் எமது உரிமைக்கான விடுதலைப் போராட்டத்தைக் கண்டு வியந்து அஞ்சிய வல்லரசு நாடுகளினதும் துரோகத்தனத்தால் எமது விடுதலைக்கான உரிமைப் போராட்டம் மே -18 - 2009 அன்று முள்ளிவாய்க்காலில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான எம் உறவுகளின் உயிர்களை காவு கொண்டு மௌனிக்கப்பட்டு தற்பொழுது 11 ஆண்டுகளைத் தொடுகின்றது.

எமது விடுதலைப் போராட்டம் மௌனிக்கப்பட்டு 11 ஆண்டுகள் ஆகின்ற நிலையில் போராட்டத்தின் இறுதி நாள்களிலும் சரி, போராட்டத்தின் பின்னரான காலத்திலும் சரி படையினரால் எம் உறவுகள் படுகொலை செய்யப்பட்டும், பெண்கள் கற்பழிக்கப்பட்டு சித்திரவதை செய்து படுகொலை செய்யப்பட்டும், சிறுவர்களை துன்புறுத்தி சுட்டுக் கொன்றும், சரணடைந்த பலர் காணாமல் ஆக்கப்பட்டும், கடத்தப்பட்டும், அரசியல் கைதிகளாக அடைத்தும் தனது உச்ச கட்ட இனவெறியாட்டத்தை புரிந்ததற்கான ஆதாரங்கள் அனைத்தும் இருந்தும் இன்றுவரை சர்வதேச நாடுகள் எமக்கான நீதியை பெற்றுத்தருவதில் காலதாமதம் செய்கின்றார்கள்.

நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் தமிழ் மக்களின் உரிமைக்கான தீர்வு எனும் விடயத்தில் இன்றுவரை தொடர்ச்சியாக எம்மை ஏமாற்றியே வந்துள்ளார்கள் என்பது அப்பட்டான உண்மை. இதுபோக எமது தமிழ் அரசியல் தலைமைகளோ அரசுக்கு எதிரான எதிர்ப்பு அரசியலை முற்றாக புறந்தள்ளி ஜனநாயகம் என்ற போர்வையில் ஓர் இணக்க அரசியலை கையிலேடுத்ததால் தமிழ் மக்களுக்கு பாரியளவில் ஒரு நன்மையும் ஏற்படவில்லை மாறாக சிங்கள அரசுகள் ஆட்சியமைக்க எம் தலைமைகள் முண்டு கொடுத்து அவர்களிடமே சரணாகதி அரசியல் நடத்தியதே உண்மை.

எனவே இந்த அரசியல் கலாசாரங்கள் மாற்றம் பெற வேண்டும் தமிழ் மக்களுக்கான நீதியையும், உரிமைகளையும் பெற்று எமது தமிழர் தாயகப் பகுதியில் நிம்மதியாக, சுயகௌரவத்துடன் வாழ வேண்டும் என்றால் எமது தமிழர் தரப்பு அரசியலில் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்த மக்கள் தயாராக வேண்டும். அதற்காக எம் தாயக மக்கள் அனைவரும் ஒரு நேர்மையான அரசியல் தலைமைத்துவத்தின் கீழ் ஒன்றுபட வேண்டிய தார்மீக்கடமை எம் அனைவருக்கும் உண்டு.

இன்று 2020 ,மே18 அன்று எமது தமிழினப் படுகொலையின் 11 ஆவது நினைவு தினத்தை புலத்திலும், களத்திலும், விசேடமாக தமிழகத்திலும் வாழும் எம் உறவுகள் அனைவரும் உங்கள் இருப்பிடங்களில் இருந்தவாறு மாலை 06.15 மணிக்கு சுடரெற்றி படுகொலை செய்யப்பட்ட எம் உறவுகளுக்கான நினைவு அஞ்சலியை அனுஷ்டிக்குமாறு தார்மீக உணர்வுடனும் உரிமையுடனும் கேட்டுக்கொள்கின்றோம்.






## ஜூன் 20 இல் தேர்தல் சாத்தியமேயில்லை!

நாடாளுமன்றத் தேர்தலுக்காக நிர்ணயிக்கப்பட்ட ஜூன் 20 ஆம் திகதியில் தேர்தலை நடத்த வாய்ப்பில்லை எனவும், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை பொறுத்து முடிவு அமையும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஐந்து வாரங்கள் அல்லது 35 நாள்கள் பிரச்சாரத்திற்கான குறைந்தபட்ச காலம், ஆனால் ஜூன் 20 க்கு முன்னர் அது சாத்தியமில்லை என்றும் இருப்பினும், நீதிமன்றின் உத்தரவை தவிர ஜூன் 20 நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது சந்தேகம் எனவும் அவர் கூறினார்.

இந்த வாரம் கூடியிருந்த தேர்தல்கள் ஆணைக்குழு, உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி செயற்பட வேண்டும் என்று முடிவு செய்தது. இதைக் கருத்திற் கொண்டு, நிலைமையை மதிப்பாய்வு செய்ய ஆணைக்குழு மீண்டும் புதன்கிழமை மற்றொரு கலந்துரையாடலை நடத்தவுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் தேர்தல்களை நடத்துவதற்காக தேர்தல்கள் ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்ட முடிவை சவாலுக்குட்படுத்தும் அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டமையானது புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த வழக்குகள் நாளை மற்றும் நாளைமறு தினம் விசாரணைக்கு வருகின்றது.

தேர்தல் திகதியை தீர்மானிக்கும் அதிகாரம் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டால் வரவிருக்கும் உயர் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் நான்கு அம்ச விடயங்களை ஆணைக்குழு பின்பற்றும் என மஹிந்த தேசப்பிரிய குறிப்பிட்டார்.

தேர்தலை பாதுகாப்பான முறையில் நடத்த முடியுமா, போட்டியிடும் அரசியல் கட்சிகள் தங்கள் அரசியல் பிரசாரங்களை நடத்த போதுமான காலம் உள்ளதா, தேர்தல்களை நடத்துவதற்கு உகந்த சூழல் இருக்கிறதா, தேர்தல்கள் தொடர்பான பணிகளை சரியான நேரத்தில் முடிக்க முடியுமா என்பது குறித்து ஆணைக்குழு ஆராயும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த ஏற்பாடுகளை இறுதி செய்வதற்கு முன்னர் பொது சுகாதார அதிகாரிகள், அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம், சுகாதார மருத்துவ அதிகாரிகள், சமூக மருத்துவ நிபுணர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நாடுவோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.05.2020 இல் வெளியிடப்பெற்றது.